No. M.2210

1429

ஆசிரியர் : வை. மு. கோதைநாயகி அம்மாள்

JEGAN MOHINI

ஜகன்மோகினி

OF THE REGISTRAR OF ... 15 MAR 1927

மலர் IV December 1926 இதழ் 3

வருஷ சந்தா: ரூ. 1 8. தனிப்பிரதி. அணா 3.

ஜகன்மோகினி ஆபீஸ்,
26 தோடித் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

2049
182832

குறிப்பு:—ஒவ்வொரு மாதமும் கடைசித்தேதிக்குள் சஞ்சிகை வெளியாகும்.

ஜகன்மோகினி.

இது ஓர் மாதாந்த சஞ்சிகை. இதன் மூன்றாவதாண்டில் ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகியம்மாளால் எழுதப்பட்ட "வைதேகி" என்ற அபூர்வத் துப்பறியும் நாவல் வெளிவந்தது. இதன் நான்காவதாண்டில் மேற்படியாரால் இயற்றப்பெற்ற "பத்மசுந்தரன்" என்ற நாவல் வெளிவருகிறது. இச்சஞ்சிகையை எல்லோரும் ஆதரிக்கும்பொருட்டே இதற்கு வருடச் சந்தா உள்நாடு, வெளிநாடு இரண்டிற்கும் ரூபாய் 1 8 0 தான் வைத்திருக்கிறது. மேற்படி குறைந்த சந்தாவுடன் பல அரிய விஷயங்களையும், ஹாஸ்ய விநோதங்களையும், சிறந்த துப்பறியும் நாவல்களையும் தாங்கிவரும் இஜ்ஜகன்மோகினியை எல்லோரும் ஆதரிக்க வேண்டுமாய்க் கோருகிறோம்.

நிற்க, இச்சஞ்சிகைக்கு ஐந்து பேர்களை சந்தா சேர்த்துக் கொடுக்கும் நண்பர்களுக்கு ஒரு வருஷ சஞ்சிகையும், 12 பேர்களை சேர்த்துக் கொடுப்பவர்க்கு 1 வருஷ சஞ்சிகையும், வைதேகி 2 பாகங்களும் (தனி விலை ரூ. 2 8 0) இனாமாக அனுப்பப்படும். சஞ்சிகையை வி. பி. யில் அனுப்பினால் அதிகமாக 3 அணா செலவாகுமாகையால், வேண்டியவர்கள் தயவுசெய்து மணியார்டர் அனுப்புவதே உசிதம்.

எமது சந்தாநேயர்களுக்கு "வைதேகி" விலை ரூ. 2 0 0

"ஜகன்மோகினி" ஆபீஸ்.

26 தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

Tamilian Residents of Calcutta !

We have pleasure in informing that

MR. R. VASUDEVAN
c/o "CAPITAL" LTD.,
Post Box No. 14,
CALCUTTA.

has kindly consented to act as our Honorary Representative there. He is authorised to collect subscriptions and grant receipts on our behalf. This arrangement will save unnecessary postal expense to our intending subscribers. Copies of the journal can be had from him.

JAGANMOHINI OFFICE,
26, Car Street, Triplicane,
Madras.

நமது சந்தா நேயர்களுக்கு வந்தனம்.

எனதன்பார்ந்த சகோதர சகோதரிகளே!

நமது ஜகன்மோகினிக்கு நிகழ்ந்து வரும் நான் காவதாண்டிற்கு, சென்ற ஆண்டின் சந்தா நேயர்களில் பெரும்பாலோரும் இன்னும் புதிய சகோதர சகோதரிகளும் சந்தா நேயர்களாகச் சேர்ந்து நமது பத்திரிகையை ஆதரிக்க முன் வந்ததற்காக எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன். பத்திரிகை அபிமானிகளுடைய ஆதரவை எதிர் நோக்கி வெளிப்போந்துள்ள ஜகன்மோகினிக் குழவியைக் கவனிக்கும் நேயர்களும் சந்தாதாரராகச் சேர்ந்து தழுவியாதரித்து நமக்கு மேன்மேலும் ஊக்கத்தை விளைவிக்க முன் வருமாறு வேண்டுகின்றேன்.

இங்ஙனம்:

தங்கள் சகோதரி,

வை. மு. கோதைநாயகி

"ஜகன்மோகினி"

சந்தாதாருக்கு மாத்திரம்

பல பரிசுகள்.

முழுவிவரம் அழகிய சித்திரப்படத்தோடு கூடிய அடுத்த சஞ்சிகையில் வரும்.

5 ரூபாய்கள் இனாம்.

கையுண்டு காலில்லை யெங்கும் செல்வார்,
கழுத்துண்டு உடலுண்டு தலையுமில்லை
தையலரும் புருடர்களும் தழுவவார்கள்
தண்ணீரில் பலநாளும் ஸ்நானம்செய்வார்
பொய்யல்ல ஆபரணம் பூணுவார்கள்
போதுவாக பிஞ்சுவிடும் கசக்கும் காயும்
செய்யுளுள்ள பொருள்கண்டு விடை பறிந்து
செப்புவீ ரெல்லோருந் தெரியத்தானே?

விடுவிடுப்புத் திரட்டு.

விதிகள்.

விடுகதைகளுக்கு விடையெழுதுவோர் தெளிவாக இங்கியில் எழுதி அனுப்பவேண்டும். ஒவ்வொரு விடை காகிதத்தின் கீழ் எழுதியவரின் கைபொப்பமிட்டிருந்தாலன்றி போட்டியில் சேர்க்க முடியாது. குறிப்பிட்ட தேதியில் விடு விடுப்பை பரிசோதிக்கும்பொழுது முதலில் பார்க்கப்படுகிற சரியான விடுவிடுப்பை எழுதியவருக்கு ஐந்து ரூபாய்கள் பரிசு கொடுக்கப்படும். மற்றும் இது சம்பந்தமாய் யாதொரு கடிதப்போக்கு வரத்தும் வைத்துக்கொள்ள முடியாது. விடுகதை பரிசோதகரின் தீர்ப்பே முடிவானதும் சட்டப்படி செல்லக் கூடியதுமாகும்.

விடை காகிதமும் அதனுடன் இரண்டணா போஸ்டல் ஸ்டாம்பும் அடக்கம் செய்து 15-1-1927-க்குள் சேரும்படி திருவல்லிக்கேணியிலுள்ள "ஜகன் மோகினி" ஆபீஸின் மானேஜருக்கு அனுப்பவேண்டும்.

இங்கிலீஷ் மெடிகல் டிஸ்பென்ஸரி
நாசை, 25—12—1926.

டாக்டர் கே. எஸ். பீ. மணியம்,
விடுகதை பரிசோதகரும்
பரிசளிப்பருவம்.

OFFICE OF THE REGISTRAR OF
15 MAR 1927

உ

ஓம்

ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு

திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து

மலர் IV	அக்ஷய வரு மார்கழி மீ December 1926.	இதழ் 3

திருமால் துதி.

பருங்கோட்டு மதயானை படியின்மிசை முடிந்தொழிய
ஒருங்கோட்டு நல்வினையா னுயர்மாம னுயிரொழித்தும்
அருந்தகைசேர் வளையாழி யணிமலரங் கரமறப்பத்
திருந்தலரைப் பெருஞ்சமரிற் றிறலழிக்கும் விறலோய்நின்
கதிருலவு நெடுமுடியும் கமழ்துளவம் பெறுபுயமும்
மதிமுகமும் நதியுறையு மலரடியு மனனகத்து
நிலவவருள் புரிகுவையேல் நெடும்பாச வினையொழிந்து
குலவுநலம் கொள்வன் குறித்து. ஸ்ரீவீரராகவகவி

சோதியே சுடரே சுகமே துணை
நீதியே நிசமே நிறைவே நிலை
யாதியே யுனையா னடைந் தேனகம்
வாதியா தருள் வாயருள் வானையே.

தாயுமானவர்.

ஸ்ரீ தந்வந்தரி அவதாரம்.

வாசவ நீயும் வானவர் தம்முடன்
ஆசறச் சென்றிட் டணிவரை மந்தரம்
கொண்டுபாற் கடலைக் குளிர்திரை பொங்க
அண்ட ருடனே யணிபெறக் கடைவாய்
அன்றவண் வருது மென்றவன் உரைக்க
வானவர் கோனும் மகிழ்ந்து அவனாணையால்
கானுறு வரைகொடு கார்க்கடல் தன்னைக்
கடைகையி லவ்வரை கடற் கீழழுந்தித்
தடையுறத் தேவர் தாமோ தரனைச்
சிந்தையில் நினைந்து செழுமறை யொலியால்
பந்தனை தீரப் பரவுங் காலை
முழுமுதற் கடவுள் முனைந்தவண் தோன்றிப்
பழுதற வாமையாய்ப் பண்புட னம்மலை
முதுகினிற் றாங்கி மொய்கடல் தன்னை
இதமுறக் கடைகையில் எழுந்தன ளிந்திரை
தெய்வச் சுரபியும் தேவ மகளிரும்
உய்வுறு மெழிலுடை யுச்சைச் சிரவமும்
பாரிஜாதமும் பண்புறு கௌஸ்துபம்
மாரி போலமுதம் மகிழ்வுறப் பொழியும்
கலைபெறு திங்களுங் கடுமையார் விடமும்
நிலைபெற வெழுந்தன நீடிய வானவர்
கடுவினைக் கண்டு கலங்குங் காலை
வடுவிலாது அவர்க்கு வந்தெதிர் தோன்றி
அஞ்சன்மின் யாரும் அபயந் தந்தனம்
எஞ்சிடா தருள்வோம் என்றொரு கரத்தில்
அமுதமார் கலசம் அணிபெற வேந்தி
இமையவர் மகிழ்ந்தே யேக்கமற் றொளிர
விஞ்சிய நஞ்சினை விரிசடைச் சங்கரன்
அஞ்சிடா துண்ண வருளி வேறசுரரை
உலகெலா மயக்கு மொண்டொடி யணங்காய்
இலகமுன் றோன்றி யிமைப்பினில் வஞ்சித்து
இமையவர் யார்க்கு மெழில் அமுதருளிக்
குமைவுறா தவரைக் குறிப்புடன் காக்க
வந்தருள் தன்வந் தரியை நோக்கி (தொடரும்)

ஹாஸ்யத் துணுக்குகள்.

(1) கிழவர்:—ஏண்டா பையா அழுகின்றாய்?

பையன்:—உம். உம். கடைக்காரன் ஏழைபாய்விடுகிறானே என்று அழுகிறேன்.

182832

கிழவர்:—கடைக்காரன் ஏழையானுலென்ன அதற்கு? ஏன் நீ அழுகிருய்? அழுதால் அவன் பணக்காரனுய்விடுவானே?

பையன்:—(சிரித்துக்கொண்டே) ஓ! கட்டாயம் பணக்காரனுகி விடுவான்.

கிழவர்:—அது எப்படியப்பா?

பையன்:—நான் வெறுமே அழுது தொந்தரை செய்தால்தானே எனக்கு நீங்கள் காசு கொடுப்பீர்கள். நானதை எடுத்துக்கொண்டு போய் உடனே சாக்லேட், பப்பர்மின்டு எல்லாம் வாங்கித் தின்பேன். கடைக்காரன் எனக்கு பப்பர்மின்டு கொடுத்து பணக்காரனுகிவிடு வான். நான் பப்பர்மின்டு வாங்கி பாபர்சீட்டுகூட வாங்கிவிடுவேன்.

கிழவர்:—பேஷ். வெகு அழகாக இருக்கிறது.

(2) கிழவி:—ஏண்டி வெறுமே வாய் மூடாமல் சிரிக்கின்ருயே என்ன அதிசயத்தைக்கண்டாய்?

பெண்:—எதிர்வீட்டில் தினம் தினம் கலியாணம் வந்துவிடுகின் றதே அதற்காகச் சிரிக்கிறேன்.

கிழவி:—கலியாணமானுல் சிரிப்பெதற்கு?

பெண்:—அவர்கள் வீட்டில் தினம் தினம் கலியாணம் வருவ தும் போதும் என்னைப்பாடச் சொல்லி ப்ராணனைஎடுப்பதும் போதும். அதற்காகத்தான் சிரித்துச் சிரித்து தொண்டையைக் கட்டச் செய்து கொண்டால் பாடாமலிருக்கலாம் என்று காலைமுதல் சிரிக்கிறேன். பாதி கட்டிவிட்டது.

கிழவி:—பேஷ் வெகு அழகு. நீ சிரிப்பதோடு இருப்பவர்களை யும் சிரிக்கச் செய்கிருயே.

(3) புருஷன்:—என்ன எழவுடீ இது? வெளியில் சென்று வேலை செய்து அலுத்து வீடுவந்தால் நீ என்னவோ முகத்தைக் கடுவன் பூனைபோல வைத்துக்கொண்டிருக்கிருயே என்ன கோபமடி உனக்கு?

பெண்ஜாதி:—நான் பெண்பிறந்த சவரணைக்குக் கோபமென்ன? நேற்றுக்காலைப் பெண் பக்கத்துவீட்டுப் பாலாமணி இன்னும் விடிய விடிய 13 வயதாகவில்லை, அதற்கு நாளைக்கு சீமந்தமாம். எனக்கும் 35 வயதாகிறது,ஒருநாளைக்காவது எனக்குச்சீமந்தம் செய்ததுண்டா? வளைகாப்பு செய்ததுண்டா அதுதான் கோபம்.

புருஷன்:—(சிரித்துக்கொண்டே) அட கஷ்டகாலமே! மலடி யான உனக்குச் சீமந்தம் எப்படிச் செய்வது? பேஷ் நன்ருக இருக் கின்றது உன் புத்தி விசாலம்.

(4) தகப்பன்:—பையா! உனக்குத்தீபாவளிக்கு 15 ரூபாய் தருகி றேன். அதனை நீ என்ன செய்வாய்?

பையன்:—(சந்தோஷத்துடன்) அப்பா! நான் கரியில்பாதி; தறியில் பாதி போட்டுவிடுவேன்.

தகப்பன்:—என்னடா நீ சொல்வது அர்த்தமாகவில்லை.

பையன்:—ஏனப்பா? பாதிப்பணம் பட்டாஸ் முதலியவை வாங்கிக் கரியாக்கிவிடுகிறேன். பாதிப்பணம் துணி வாங்கித் தறிகாரனுக்குக் கொடுத்துவிடுகிறேன், சரிதானே,

தகப்பன்:—வெகு சந்தோஷம் அப்படியே செய்.

(5) வாத்தியார்:—என்னடா பையா! கணக்குப் போட்டுவிட்டாயா?

பையன்:—போட்டாய்விட்டது. எனக்குத் தெரியாதவற்றை எங்கம்மாளைக் கேட்டுத் தெரிந்துகொண்டேன். நீங்கள் கொடுத்த காகிதத்திலிருந்த கணக்கை முதலில் கிழித்துக்கழித்தேன்; அப்புறம் கழித்ததை விளக்கு மாற்றால் பெருக்கினேன்; அதன்பிறகு அவற்றையெல்லாம் வகுத்துக் கூட்டினேன். பிறகு வீதியில் கொண்டு கொட்டிவிட்டேன். தாங்கள் சொல்லியபடி கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல், ஆகிய நான்கும் போட்டுவிட்டேன்.

உபாத்தியாயர்:—அப்பா! நீ நல்ல கெட்டிக்காரத்தனமாய்க் கணக்குப் போட்டதற்காக உன்னைக் கீழ் வகுப்புக்கு ப்ரமோஷன் செய்துவிட்டேன். ஓடு நாயே!

வை. மு. கோ.

1927ஆம் கியாலண்டர் வரவு

இரங்கூனில் பிரபலமாகப் புத்தக வியாபாரம் செய்து வரும் நவீன கதா புக்டிபோக்காரர்களின் சென்னைப் பிரதிநிதியான M. A. மலீக் சாயபு அவர்கள் அன்பு கூர்ந்தனுப்பிய 1927-ம் வருஷத்திய கியாலண்டர்கள் மூன்றும் வழக்கம்போல் இங்கிலீஷ், தமிழ், இஸ்லாம், தெலுங்கு தேதிகளும் பண்டிகைகளும் அடங்கியனவாயிருப்பதுடன், சிறியருமே யன்றிப் பெரியரும் கொண்டாடத்தக்க விதமாயும் வீட்டில் எப்போதும் வைத்துக்கொள்ள விரும்பும்விதமாயும் ஒரு கியாலண்டரில் ஒவ்வொருமாதத்தாளில் சிரோபூஷணமாய் விளங்கும் நீதிவாக்கியங்கள் மிகவும் பாராட்டத்தக்கவைகளா யிருக்கின்றன. இப்படிப்பட்ட கியாலண்டர்கள் பல வெளிவருவதும் உலக உபகாரமாகும். வியாபாரமுறையை மாத்திரம் அநுசரித்துச் செய்யாமல்பிறர் நீதிமார்க்கத்தி லீடுபடும்படி கியாலண்டர் அமைத்துள்ளது பிரசுரித்தவரின் பரம உபகாரகுணத்தை உணர்த்துவதாகிறது.

5-வது அதிகாரம்

காதலின் திறமையும் காதகர் கொடுமையும்

கடலில் விழுந்த கன்னியரைக் காப்பாற்றிக் கரைசேர்த்தகாருண்ய மும் கண்ணியமும் பொருந்திய இளம் வாலிபன் கன்னிகைகளை மோட்டார் காரில் ஏற்றியனுப்பிய பின்னர் நேரே தனது ஜாகையை நோக்கி வேகமாய் நடக்கலானன்.

அந்த வாலிபன் திருவல்லிக்கேணியிலுள்ள நல்லதம்பித் தெருவில் ஒரு மாடி வீட்டில் தனித்த அறையொன்றை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு அதிலே வசித்துவருகிறுன். அவனுடைய தாய் தந்தையர் ஆதி முதல் ஏழைகளாகவே இருக்கிருர்கள். அவர்கள் எவ்விதமேனும் கஷ்டப்பட்டுத் தமது புத்திரனை நன்ருகப் படிக்கவைத்துப் பின் அவனுல் தாம் நல்ல பதவியை அடையவேண்டுமென்ற கருத்தோடு தமக்குள்ள சொற்ப நிலங்களில் வரும் வருமானத்தையும் இன்னும் எவ்விதமோ கஷ்டங்களையெல்லாம்பட்டு வயிற்றைக்கட்டி மகனுக்குப் பணத்தையனுப்பிப் படிக்கவைத்தார்கள். அவர்கள் மனங்கோணுதபடியே குமாரனும் தன்னுலானவரையில் பணத்தை ஜாக்கிரதையாகச் செலவிட்டும் அக்கரையாய்ப் படித்தும் வந்தான்; தன் ஒய்வு நேரங்களை வீணுக்காமல் சில பிள்ளைகளுக்குப் பாடங் கற்றுக்கொடுத்து அதனுல் வரும் பணத்தையே தன் செலவிற்கு உபயோகப்படுத்திக்கொண்டு தன் பெற்றேரை அதிகச் சிரமம் கொடுக்காமல் புத்திசாலியாயிருந்து வருகிறுன்.

இவனுடைய தாய் தந்தையர்கள் பணத்தில் ஏழைகளேயன்றிக் குணத்திலும், நன்னடையிலும், பக்திவிசுவாசத்திலும் இன்னுமற்ற சகல அம்சங்களிலும் அவர்களைப்போல் அகப்படுவதே அரிது என்று பிறர் புகழும்படியான நிலைமையையுடையவர்கள். தாரித்ரிய திசையில் கூட அவர்கள் அதிதிகளுக்கு உணவிட்ட பின்னமே தாம் புசிப்பது வழக்கம். தாம் பட்டினி கிடந்து பிறருக்கு உணவிட்டு மகிழ்வதே அவர்களுக்கு இன்பம். தாமே உண்டு தாமே களித்துத் தாமே இன்பமடைய வேண்டுமென்கிற சுயநலத்தை அவர்கள் நாடுபவரல்லர். அவர்களுடைய குணவிசேஷத்தினுல் அந்த ஊர்முழுவதும் அவர்களைப் பணம் நிறைந்த ஜமீந்தாரர்களைக் கொண்டாடுவதைவிடப்

பதின்மடங்கு அதிகமாகவே கொண்டாடி வருகிறார்கள். பரமசிவ முதலியார், உமாமஹேச்வரியம்மாள் என்றால் அவர்களை அறியாதவர் யாருமிலர். அவர்களுக்கு நாலைந்து குழந்தைகள் பிறந்து கைதவறிப் போய்ப் பின் ஒரு குழந்தை ஈசனருளால் பிச்சையாக நின்றது. அந்தக் குழந்தையை அவர்கள் எவ்வளவோ செல்வமாக வளர்த்து முதலிலிருந்தே நல்ல பழக்கத்திலும், நன்னடையிலும் பழக்கி வந்தார்கள். புலியின் வயிற்றில் பூனை பிறக்குமா? அவர்களுக்கு மதிகமான விசேஷித்த குணமுடைய புலிக்குட்டியாகவே அந்தக் குழந்தை வளர்ந்து வந்தது. அதற்கு அவர்கள் சண்முகம் என்ற நாமத்தைச் சூட்டினார்கள். இந்தக் குழந்தையின் ரூபலாவண்யத்தைக் கண்ட ஊரார் எல்லோரும் சேர்ந்து அந்தக் குழந்தைக்கு சண்முகம் என்ற நாமத்துடன் சுந்தரன் என்பதைச் சேர்த்து சண்முக சுந்தரன் என்றழைத்தார்கள். சண்முக சுந்தரன் என்ற நீண்ட பெயரைக் கூப்பிடுவது கஷ்டமாகத் தோன்றியதனால், அவர்கள் சுந்தரன் என்று அழைத்தனர். பின் அந்தப் பெயரே பையனுக்கு விளங்கிவிட்டது. அவனுக்கு முறையே கல்வி கற்றுக்கொடுத்து பிறகு சென்னையில் தமது உறவினர் ஒருவரிடம் ஒப்புவித்து கலாசாலையில் சேர்த்து இலவசத்திலேயே கல்வி பயிலும்படி செய்துவந்தார்கள். பையன் வெகு புத்திமானானபடியால் ராஜதானிக் கல்லூரியில் முதல்தரமாகவேபடித்துவந்தான். பிறகு அவனுக்கு வைத்தியக்கல்லூரியில் (மெடிகல் காலேஜில்) படிக்கப் பிரியமுண்டாயிற்று. அதனால் அவன் அதில் சேர்ந்து படிக்கலானான். அதில் ஐந்து வருஷம் படித்து முதல் தரமாகத் தேறி தற்போது ஒரு பெரிய வைத்தியரிடம் வைத்தியம் பழகி வருகிறான்.

"தாயினிற் சிறந்த தேய்வ மிலையுயர் தந்தை தன்னில்
ஏயநற் குருவு மில்லை யேன்னின்மற் றிவர்கள் தாளில்
தூய்மலர் தூவி நாளுந் தொழுதிடு மறிஞர் தாமே
யாய்கதிர் பரப்பும் பொன்னாட் டமரராய்ச் சிறந்து வாழ்வார்"

கூர்மபுராணம்

என்று தாய் தந்தையர் பெருமை விளங்குகிறபடியால் அவன் தனது தாய் தந்தையரையே தெய்வமாக எண்ணி அவர்களின் புகைப் படத்தைத் தினம் வணங்கிய பின்னரே தான் தன்னுடைய அலுவல்களைக் கவனிக்கச் செல்வான். உலகத்தில் சத்புத்திரர்களுக் குரிய கடமைகளெவைகளோ அவற்றினின்றும் அவன் ஒரு சிறிதும்

பிறழ்ந்தவனன்று. தான் எவ்விதமாகிலும் சம்பாதித்துத் தனது பெற்றோர் தனக்காகப்பட்ட கஷ்டங்களையும் அவர்கள் கோரியகோரிக்கைகளையும் நிறைவேற்றி அவர்களை மகிழ்விக்கவேண்டும் என்ற கருத்தையே யவன் முதலாகக்கொண்டிருந்தானுகையால், அவன் அதே நோக்கத்தில் கண்ணுயிருந்து வந்தான். மாதம் ஒரு முறையாவது அவன் தன் தாய் தந்தையரிடம் சென்று தரிசனம் செய்துவிட்டு வருவது வழக்கம். அவர்களும் இந்தத் திருவல்லிக்கேணியிலேயே ஜாகை வைத்துக் கொள்வதென்றுல் அதிகச் செலவாகுமென்றதனுல் மகனை மாத்திரம் இங்குவிட்டுத் தாம் அங்கேயே இருக்கிறுர்கள். முதலில் சுந்தரன் தமது உறவினர் வீட்டிலிருந்து சிலநாள் படித்தான். பிறகு தானே தனி ஜாகை வைத்துக்கொண்டு சோற்றுக்கடையில் புசித்துக் கொண்டு படிக்கலானுன். அவனுக்கு அதிகமான சிநேகிதர்களும் இல்லை. நல்லவராக இருவரே அவனுக்கு உயிர்த் தோழராயினர். அவன் பிறர் கேட்டதற்குப் பதில் சொல்வானே தவிர தானுக எதையும் முன்னே விழுந்து பேசுவது கிடையாது. கண்ட இடத்திற்குச் செல்வதும், கண்டபடி புசிப்பதும், வீண் அரட்டலில் பொழுதைச் செலுத்துவதும் அவனிடம் பழகுவோருக்குமில்லையென்றுல் அவனைப் பற்றிச் சொல்லவேண்டுமா? அவன் சதா ஈச்வர பக்திசெய்வான்; ஸன்மார்க்கத்திலேயே நடப்பான்; தன் கருமத்தில் கண்ணுக விருப்பான்; தாய் தந்தையரை உற்சாகப்படுத்துவதிலேயே சித்தமுடையவனுயிருப்பான். அவனுடைய உயிர்த் தோழர்களாகிய சிவராமன் கோபாலன் ஆகிய இருவரும் அவனுடைய நடையுடைபாவனைகளையே கைப்பற்றிச் சற்றேறக்குறைய இவனைப்போலவே சகல விதத்திலும் சிறந்திருக்கிறுர்கள். அவனை ஒரு நிமிடம் பார்க்காவிட்டால், உயிர் போய்விடும்படியான ப்ரேமையையும் உள்ளார்ந்த அன்பையும், மதிப்பையும் இவனிடம் அவர்கள் வைத்திருக்கிறுர்கள். தினம் காலை மாலை ஆகிய இரண்டு நேரங்களில் மூவரும் ஒன்றுகவே போஜனம் செய்யச் செல்வது வழக்கம். அன்றும் அவர்கள் சுந்தரன் வரவை ஆவலோடு எதிர் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தார்கள். மணி ஏழு அடித்துவிட்டது. மாலை நான்கு மணிக்குச் சென்ற மித்திரன் இன்னும் வராமையால் அவ்விரு நேயர்களும் அவன் வரவை எதிர் நோக்கியபடி பலவாறு ஆலோசனை செய்தும் சம்பாஷித்துக் கொண்டிருக்கிறுர்கள்.

சிவராமன்:—என்ன கோபாலா! சுந்தரன் சென்று இத்தனை நேரமாய்விட்டது. இன்னும் வரக் காணவில்லையே! பாலனைக் கப்பலில் ஏற்றிவிட்டுவருவதாகக் கூறிச் சென்றவன் மணி ஏழுக்கு மேலாய் விட்டதே. இன்னும் என்ன செய்கிருனே. தெரியவில்லையே!

கோபாலன்:—அதுதான் எனக்கும் தெரியவில்லை. அவன் கப்பலை விட்டுப்புறப்பட்டால் நேரே வீட்டுக்கு வருவதைத்தவிர வேறெங்கும் செல்லமாட்டான். அவனுடைய சுபாவமுற்றும் நமக்குத் தெரிந்திருக்கிறதே! நாம் அவன் ஏன் இன்னும் வரவில்லை என்பதை எவ்வாறு அறிவது? கப்பல் துறையிலேயே ஒருகால் தாமதமேற்பட்டிருக்குமோ?

சிவரா:—அவன் சுபாவம் தெரிந்திருக்கின்றபடியால் தான் சற்று அலையவேண்டியிருக்கின்றது. அவன் கண்டவிடத்திற்குச் செல்லக் கூடியவனுயிருந்தால் அவனைப்பற்றி நாமேன் கவலை கொள்ளப் போகிறோம். அவனுடைய அம்ருதம்போன்ற குணத்தில் ஈடுபட்டதனுல் நாமும் இதுவரையில் நன்னடையிலேயே பழகி துஷ்ட சகவாசமில்லாமலிருக்கிறோம். அடடா! நானே ஒவ்வொரு சமயம் நினைத்துப் பார்க்கிறேன். அவனுடைய மனோதைரியத்தையும் அவனுடைய மற்ற உயர்ந்த குணங்களின் அம்சங்களையும் எண்ணுந்தோறும் எனக்கே ஆச்சரியமாக இருக்கின்றது. அவனுடைய தெய்வபக்தியும் என்னிடத்து அவன்காட்டும் பக்தி விசுவாசமும் நாளுக்குநாள் விருத்தியாவதைக் காண என் மனதில்சொல்லரிய ஆநந்தமுண்டாகிச் சுந்தரனிடத்தில் அபூர்வமானபற்றும் ப்ரேமையும் அதிகரிக்கின்றன. அவன் பணமில்லாத ஏழையாயிருந்தும் நிறையப் பணம் படைத்துள்ளவரிடமும் காண்பதற்கரிய பெருந்தன்மை அவனிடம் விளங்குகிறதென்று கூறுகிறேன்'' என்றான். அப்போது மணி எட்டடித்தது. உடனே கோபாலன் ''நண்ப! மணி எட்டடித்துவிட்டதே. இன்னும் என்ன செய்கிறன் அவன்!'' என்று கவலைப்பட்டான்.

சுந்தரன் பாவையரிருவரையும் வண்டியில் ஏற்றி அனுப்பியபிறகு தன் வீட்டை நோக்கி நடக்கலானன் என்றாலும் அவன் மனமெல்லாம் அவளைவிட்டுச் சற்று விலகி யிருந்தமையால், கால்நடையும் தன்னை மீறிய ஓய்வோடு நிதானமாகவே இருந்தது. அவனுக்குக்கப்பலில் தான்கண்ட ஓர் அதியற்புதமான காட்சியின்மீதே மனம் சென்று

லயித்துப் போனபடியால் அவன் ஒன்றுக்கும் உதவாத வெறும் மனி தனாக மாறிவிட்டான். அவன் கப்பலில் தன்னுடைய சிநேகிதனொருவனை ஏற்றிவிட்டு வருவதற்காகச் சென்றிருந்தகாலத்தில் கப்பலில் தான் கண்ட ஓர் அரிய காட்சியும் பிறகு திரும்புகையில் கடலில் நேர்ந்த அதி அபாயகரமான சம்பவமும் அதற்குத் தான் தன்னாலியன்ற உதவியைச்செய்து பாவையர்களைக் கரை சேர்த்ததும் ஒன்றன்பின் னொன்றாய் அவன் மனதில் தோன்றித் தோன்றி மறைந்து கொண்டே இருக்கின்றன. அவன் கடலில் குதித்ததனால் அவனது உடைகளெல்லாம் நனைந்துவிட்டபடியாலும் அப்போது காலம் இரவாகையாலும், இடமும் கடற்கரையாகையாலும் பனிஅதிகமாய் வீசியதாலும் அவனுக்குச் சிலுசிலு என்று குளிர் ஏற்படத்தலைப்பட்டதென்றாலும் அவன்மனத்திலடங்கிக்கிடக்கும் விஷயங்களுக்குமுன்னே அந்தக் குளிர் தன் அதிகாரம் செலுத்த இயலாது மறைந்தது. அவன் மனதில் தோன்றித் தோன்றி மறையும் விஷயங்களையெல்லாம் விலகித் தள்ளிச் சமாளித்துக்கொண்டு தன்னாலானவரையில் விசையாக நடந்தான். ஈர உடையாகையால் அது காலைத் தடுக்கியது. குளிரால் விரைத்துப் போன கால்கள் விரைவில் ஓர் அடிவைத்து நடக்க இடந் தரவில்லை. அவன் தன் மனத்தை எவ்வாறு தேற்றிக்கொண்டாலும் கப்பலில் கண்ட காட்சி அவன் கண்களைவிட்டுச் சற்றும் அகலவே இல்லை. அந்த நிலைமையில் நிதானமாக நடந்த 'அவன் நேயர்கள் என் வரவை எதிர்பார்த்திருப்பார்களே! அவர்களுக்கு முன் இந்தக் கோலத்தோடு சென்றால் என்ன காரணம் உரைப்பது ? உண்மையைச் சொல்லாமல் மறைக்க இயலுமா ? உள்ளதை உரைத்தால் பிறகு காரியம் எவ்வாறாகுமோ இதற்கென்ன செய்வது ! மேலும் நாம் நாழிகை சென்று இல்லமேகினால் அவர்களும் உண்ணாது வழி நோக்கியே காத்திருந்து சாப்பாட்டுக் காலம் கடந்துவிட்டால் என்ன செய்வது? என்னுடைய இப்போதைய நிலைமையில் பசி என்பது எங்கு இருக்கின்றதோ எனக்குத் தெரியவில்லை. நம்மாலவர்களுக்கும் சோற்றுக் கடையில் அகாலமாய்விட்டால் என்ன செய்வது? நாம் ஒரு வண்டி அமர்த்திக்கொண்டாவது சற்று முன்னால் வீடு சேரலாம்'' என்று எண்ணியவண்ணம் நடந்தான். அப்போது அங்கு 'மவுண்ட்ரோட் திருவல்லிக்கேணி' என்று கூவிய பஸ் ஒன்று வந்தது. உடனே சுந்தரன் அதில் ஏறிச் செல்வதற்காகத் தன்னுடைய சட்டைப் பையில் பார்த்தான்.

அதில் தான்வைத்திருந்த சில்லறையொன்றையும் காணவில்லை. உடனே இவன் தூர விலகிக்கொண்டு "ஓ! பணமெல்லாம் தண்ணீரில் விழுந்திருக்கவேண்டும். இனித் தனிவண்டி கிடைத்தால்தான் போக முடியும். இல்லையேல் நடந்துதான் செல்லவேண்டும்" என்று பின்னும் நடக்கலானுன். அவனுடைய மனமும் தேகமும் முற்றிலும் மாறியிருந்தமையால் அவன் நடை வெகு நிதானமாகவே இருந்தது. அவ்வாறே அவன் மெல்ல நடந்து எட்டுமணிக்குமேல் தனது ஜாகையை யடைந்தான். இவனுடைய வரவை ஆவலோடு எதிர்பார்த்திருந்த தோழர்களிருவரும் இவனைக் கண்டவுடன் கன்றைக் கண்டதாய்ப் பசு போலப் பாய்ந்து "என்ன சுந்தரா இந்நேரமாயிற்று" என்றுகேட்டுக் கொண்டே அவனுடைய உடைகளைக் கவனித்துத் திடுக்கிட்டார்கள். "ஆ! என்ன இது! உடைகள் நனைந்திருக்கின்றனவே! ஏனப்பா என்ன காரணம்?" என்று கூறியவண்ணம் அவனுடைய தலைபைத் தொட்டுப் பார்த்தார்கள். தலை முழுவதும் நனைந்திருப்பதைக்கண்டு முன்னிலும் அதிக திகிலும் நடுக்கமும் கொண்டு "அப்பா! சுந்தரா! என்ன செய்தி? ஏன் உன் தலையும் நனைந்திருக்கின்றது? முகமும் சோருத லடைந்திருக்கின்றதே! என்ன காரணமப்பா! தண்ணீரில் விழுந்து விட்டாயா? உன்னைப் பார்த்தால் மிகவும் பயந்திருப்பது போலவும் உன்மனம் அதிகக் குழப்பத்தை அடைந்திருக்கின்றது போலவும் தோன்றுகின்றதே! கப்பலில் ஏறும்போது அல்லது இறங்கும்போது தப்பித் தவறிவிழுந்துவிட்டாயா? என்ன செய்தியப்பா?" என்று வெகு வாஞ்சையோடு பதைக்கப் பதைக்கக் கேட்டார்கள்.

இதைக் கேட்ட சுந்தரன் என்னவிதமான பதில் சொல்வதென்பதை அறவே மறந்து தன் மனத்தில் பதிந்து கிடக்கும் விஷயத்தின் மேல் சென்றிருந்த மனத்தை மாற்ற இயலாதவனுன். அவர்கள் கேட்பதற்குப் பதில் கூறுவதற்கு முடியாமல் மறதியுண்டாய் ஓய்ந்து அப்படியே அங்கு போடப்பட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்து சாய்ந்து விட்டான்.

இதைக் கண்ட நண்பர்களிருவரும் மனந் தவித்தவண்ணம், "என்ன செய்கிறதப்பா சுந்தரா? ஏன் ஒருவாறு சோர்ந்துவிட்டாய். உனக்கென்ன ஆபத்து உற்றது? அவற்றை எமக்கறிவிக்கலாகாதா? நண்பா! நண்பா!" என்று துடிதுடித்த வண்ணம்

கேட்க, வாலிபன் சற்றுத் தெளிந்தவனாய், தனக்குள் 'இதுகாறும் நாம் ஒரு பொய்க் கூட யாரிடமும் மனமறியச் சொன்னதில்லை. இன்று இந்தப் பரம சங்கடமான நிலைமையில் நாம் உண்மையைச் சொல்வோமானால், அதன்மேல் இதைப்பற்றிய ப்ரஸ்தாபமே அதிகரிக்கும். அதனால் மனதிற்கு அதிகமான குழப்பமும் ஏக்கமும் உண்டாகும். நாம் எவ்விதமாயினும் ஒரு சாக்குச் சொல்லிவிட்டு அந்த சம்பவங்களை அறவே ஒழித்துவிட வேண்டிய வழியைத் தேடவேண்டும். ஆதலால் பொருத்தமான ஒரு பொய்யைத்தான் சொல்லித் தீரவேண்டும்'' என்று தீர்மானித்துக்கொண்டு நண்பர்களை நோக்கி, ''மித்திரர்காள்! எனக்கு இப்பொழுது ஒன்றும் பேசமுடியவில்லை. எனக்கு உடம்பு சரியாகவில்லை. நான் பிறந்த இந்த இருபத்தாறு வருஷங்களாக மனதில் கூட—சொப்பனத்திலும்—எண்ணிலாதவிதமான சம்பவம் இன்று எனக்கு நிகழ்ந்திருக்கின்றது. நான் ஒருநாளும் இத்தகைய (தனக்குள் காதல்) (ப்ரகாசமாய்) கடலில் விழுந்தறியேன். இன்று கப்பலில் என்னுறவினரை ஏற்றிவிட்டுத் திரும்பிவருகையில் நான் ஏறிவந்த படகு அகஸ்மாத்தாய்க் கவிழ்ந்துவிட்டது. நான் மெல்ல நீந்தி அடித்துக்கொண்டு தப்பித்துக் கரை ஏறிவந்து சேர்ந்தேன். என் தேகம் என் வசமில்லையாதலால் நீங்கள் உங்கள் போஜனத்தை முடித்துக்கொண்டு வாருங்கள். எனக்குப் பசி என்பதேயில்லை. நான் சற்று நிம்மதியாகத் தூங்கினால் உடம்பு சரியாய்விடும். நீங்கள் கவலைப்படவேண்டாம்'' என்று கூறியவண்ணம் மெல்ல எழுந்து ஈரத்துணிகளைக் களைந்துவிட்டு வேறு உடையணிந்துகொண்டு தனது கட்டிலில் படுத்துவிட்டான்.

சுந்தரன்கூறியதைக் கேட்ட நண்பர்களிருவரும் திடுக்கிட்டு நடுங்கி ''ஆ! கடலிலா விழுந்துவிட்டாய்! அந்தோ! இது ஒரு பெரிய கண்டம்போலும்! நல்ல வேளையாய்ப் பிழைத்து வந்தாயே! ஈசன்செயல் தான் அப்பா சுந்தரா! உனக்கு ஆயாசத்தினால் பசி தெரியவில்லை, நாங்கள் சென்று உனக்கு உணவு இங்கேயே கொண்டுவருகிறோம். கொஞ்சம் ரசம் சாதமாயினும் சாப்பிட்டால்தான் உனக்கு இரவு நிம்மதியாகத் தூக்கம் பிடிக்கும். அப்பா! நீ பட்டினியாகக் கிடக்கும் போது எங்களுக்கு மாத்திரம் பசி எடுக்குமா! எங்களுக்குப் பசியே இல்லை. நாங்களும் போகவில்லை.'' என்று கூறியவாறு கட்டிலின் ஓரமாக அமர்ந்தார்கள்.

இதைக் கேட்ட சுந்தரன் தன்னால் அவர்களும் பட்டினியாகப் படுக்கப்போவது சம்மதமாக இராமையினால் மெல்ல எழுந்து உட்கார்ந்து பேசத்தொடங்கி "மித்திரர்காள்! நீங்கள் என்மீது வைத்துள்ள அன்பு எவ்வளவென்பதை நானறியமாட்டேனா! உங்களுடைய முழு மனதோடு என்மேல் உங்கள் உயிரையே வைத்திருக்கிறீர்கள் என்பதை நான் நன்கறிவேன். அதைச் சென்ற வருடம் நான் பலமான ஜுரத்தால் பீடிக்கப்பட்டபோது நன்றாக உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அறிந்தேன். நாம் ஆதியில் பள்ளியில் படித்தகாலத்தில்

"அற்ற குளத்தி லறுநீர்ப் பறவைபோ
லுற்றுழித் தீர்வா ருறவல்லர்—அக்குளத்திற்
கொட்டியு மாம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவா ருறவு" —மூதுரை

என்ற பாடலை நமக்கு உபாத்தியாயர் கற்றுக் கொடுத்திருக்கிறாரல்லவா? அந்தப்பாடலை எண்ணுகிறேன் இச்சமயம் நட்பைப்பற்றித் திருக்குறள் என்னும் தமிழ் வேதம் கூறுவதைக் கவனியுங்கள்.

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு." —திருக்குறள்

அதேபோல நீங்கள் உங்கள் பரிபூரணமான மனத்தோடு நட்பு பாராட்டுவதை நான் அறியாமலில்லை. நண்பர்காள்! என்னாலதிகமாய்ப் பேசமுடியவில்லை. நீங்கள் சென்று போஜனத்தை முடித்துக்கொண்டு வந்துவிடுங்கள். அதுவரையில் நான் சற்று நித்திரை செய்கிறேன். மேலும் நான் கப்பலுக்குப் போகும்பொழுதுதான் ஓட்டலில் நிறையச் சாப்பிட்டுவிட்டுச் சென்றேன். எனக்குப் பசியே இல்லை. நீங்களும் தாமதமாகச் சென்றால் அங்கு எல்லாம் ஆறிக் குளிர்ந்துவிடும். எனக்கு உடம்பொன்றுமில்லை. நீங்கள் சற்றும் கவலைப்படாமல் சென்று வாருங்கள். இல்லையேல் நானும் உங்களோடு கூடவந்து வெறுமனே உட்கார்ந்திருந்து நீங்கள் புசித்ததும் நானும் வந்துவிடுகிறேன்." என்று கூறி மெல்லத் தட்டித் திணறி எழுந்திருக்க முயன்றான்.

அதைக் கண்ட நண்பர்களிருவரும் அவனை எழுந்திருக்கவொட்டாமல் உட்காரவைத்து "சுந்தரம்! எங்களுக்கும் சாப்பிடவேண்டுமென்கிற எண்ணமே இல்லை. ஆனாலும் உன் வார்த்தையைத் தள்ள

மாட்டாமல் இதோ சென்று பிடித்தவரையில் சாப்பிட்டு வருகிறோம்'' என்று கூறியவண்ணம் அவ்விடத்தைவிட்டுச் சென்றார்கள்.

தனியாக விடப்பட்ட சுந்தரனுக்குத் தூக்கமும் பிடிக்கவில்லை, ஊக்கமும் நீங்கிற்று; மனத்தில் ஏக்கமே குடிகொண்டது. படுத்து விட்டான். அவன் மனத்தில் பலவாறான எண்ணங்கள் தோன்றி வருத்திக்கொண்டே இருக்கின்றன. அவன் கீழ் வருமாறு யோசனை செய்யலானான்:—

"ஆ! நான் இன்று ஏன் அந்தக் கப்பலுக்குச் செல்லவேண்டும்? என்னையுமீறி என் மனம் தவிப்பதற்குக் காரணம் அந்தக் கப்பலல்லவா? அந்தோ! சென்ற வாரத்தில் ம்யூஸியத்திற்குச் சென்றிருந்த போது அங்கு என்னுயுளில் நான் காணாத ஓர் அபூர்வ வனப்பும், சிங்காரமும், கோடி ஸூர்ய மயமான தேஜஸோடும் கூடிய ஒரு வனிதாரத்தினத்தை ஈசன் அக்குத்தற்செயலாய் என் கண்ணிற்குப் படச் செய்தான். அந்த உருவத்தைக் கண்டதுமுதல் என் மனம் என்றுமடையாத ஓர் அபூர்வ உணர்ச்சியையும் ஆநந்தத்தையும் அடைந்தது. மெய்சிலிர்ப்புமுண்டாயது. அன்றுமுதல் நான் ஒரு பித்தன் போலானேன். அந்த மாறுபாடு பெருவியப்பைத் தருகின்றது; அது பரியந்தம் எந்தப் பெண்மணிகளைப் பார்த்தாலும் சகோதரியாகவும் தாய்மாராகவும் எண்ணிவந்த என் மனது அந்த அணங்கைக் கண்ட மாத்திரத்தில் இத்தகைய விகாரங்கொண்டது ஆச்சரியமே! காரணமென்னே! ஆஹா! ஈசனுடைய மாயைதான் யாதோ? அதனையறியவல்லார் யாவர்? அண்ட சராசரங்களையெல்லாம் ஆட்டிவைக்கும் அரிய சக்தியை வகித்துள்ள உனது பெருமையில், மாயை என்னும் வலையை வீசி இத்தகைய வேதனைகளை விளைவிப்பது ஓர் வியப்பா? ஆ! உன் மாயை ஒன்றா இரண்டா? அதனை விவரித்துக் கூற ஆயிரம் நாவைப் படைத்த ஆதிசேஷனும் இயலாதென்பார்கள். அந்தோ! இவ்விதமான பாதைக்கு என்னை இதுகாறும் இலக்காக்காமல் இந்த ஒரு வாரகாலமாய் என்னை ஏன் பிடித்து வாட்டி வருத்தவேண்டும்? அந்தோ! ஒரு வாரமாக நிகழும் சம்பவங்களை நினைக்க நினைக்க எனக்கு வியப்பின்மேல் வியப்பாகவன்றோ இருக்கின்றது? ஆஹா! அன்று ம்யூஸியத்தில் அந்த மின்னாளைக் கண்டது முதல் அதே நினைவாய் உருகும் என் சித்தத்தை எந்த வழியில்

திருப்பினும் அதை அடக்கியாள என்னாலியலவில்லையே. பாழும் மனத்தை அடக்கியாளும் திறமையைப் பெறாமல் நான் இந்த ஒரு வாரமாய் இவ்விதம் தவிப்பது என்ன காரணத்தினாலோ தெரிய வில்லையே! அந்த நினைவை மாற்ற நான் பகிரதப் பிரயத்தனம் செய்து வருகையில் மீண்டும் அம்மாதின் காட்சியை எனக்குக் காட்டிய ஈச னுடைய எண்ணம் யாதோ தெரியவில்லையே! அன்று மனநிலைமை மாறிய அச்சமயம் அங்கிருக்க எனக்குப் பிடிக்கவில்லை. அதனால் நான் திரும்பிவிட்டேன். பிறகு பொழுதை எந்த விதத்திலேனும் கழிக்க எண்ணி ஸுகுணவிலாஸ சபைக்கு நாடகம் பார்க்கச் சென் றேன். அங்கும் அந்த அணங்கு ஜகஜ்ஜோதியாய் ஸ்ரீ மஹாலக்ஷ்மி யைப்போல் வீற்றிருந்து காட்சி கொடுத்து என் கவனத்தை எல் லாம் தன்னிடமே காந்த சக்திபோல் இழுத்துக்கொண்டு என்னைப் பித்தனாக்கிவிட்டாள். பின் அங்கு அதிகநேரம் இருக்க மனமில் லாமல் புறப்பட்டு வந்துவிட்டேன். அப்பால் என் மனத்தை எவ் வளவோ விதத்தில் தேற்றியும் காற்றில் அகப்பட்ட பஞ்சு படுகிற பாடு படுகின்றதேயொழிய ஒரு நிலையை அடையவில்லை. ஆஹா! அவற்றையெல்லாம் அடக்கிக்கொண்டு இன்று என்னுறவினரைக் கப் பலேற்றச் சென்றிருந்த சமயம் என் உடல், பொருள் ஆவி எல்லா வற்றையும் ஒருங்கே கொள்ளை கொண்ட அந்தக் கோகிலம் என் எதி ரிலேயே நின்று காட்சி தந்தது. இந்த மகிமையை எண்ண எண்ண தேகம் தானாகவே இன்ப ஊற்றில் மிதப்பதுபோல் இருக்கின்றதே! அடடா! என்ன லாவண்யம்! என்ன கம்பீரம்! என்ன வசீகரம்! என்ன அடக்கம்! ஆஹா! அவளுடைய பார்வையாகிய பாணம் இத் தனை நாள் என்னைத் துளைக்காமலிருந்தது. இன்று அவளுடைய மான்விழிபோன்ற மருண்ட பார்வையான அம்பு என்னை முற்றிலும் துளைத்துச் சல்லடையாக்கிவிட்டதே. சீச்சீ! பாழும் மனம் இம் மாதிரியான நிலைமைக்கு ஒரு காலத்தில் வரும் என்று நான் சென்ற வாரம் வரையில் எண்ணினவனல்லேன். என்னை ஏன் இவ்வித வேதனைகள் வந்து சூழ்ந்துகொண்டு வருத்தவேண்டும்! அந்த வனிதா ரத்தினத்தை நான் முதல் நாள் கண்டபோது அவளோடு கூட இன் னொரு எழில் மடந்தை வந்திருந்தாள். அவளிடம் என் மனமானது சகோதரி பாவனை கொண்டது. இந்த மின்னாள் மாத்திரம் என் னிதயத்தில் குடிகொண்டதேன்? அடடா! அவளையும் என் பாழும்

மனம் சகோதரியாகவே பாவித்திருக்கலாகாதோ! இந்தவிதமான உணர்ச்சியும் மனத்தவிப்பும் ஏன் உண்டாகவேண்டும்? பாழும் மனத்தை அடக்கமுடியவில்லையே என்று பெரிய மகான்களெல்லாம் கூறியிருக்க அறிவிலியாகிய என்னால் அதனை அடக்குவது சாத்யமாகுமா! அந்தோ! அம்மட்டோடு விடாமல் இன்னம் என்னென்ன விதத்தில் என்னைச் சிக்கவைத்துவிட்டார் கடவுள்! அடடா! என்ன ஆச்சரியம்! கப்பலில் எனக்கு ஒப்பற்ற காட்சியைக் கொடுத்து என்னை ஒரே கலக்கலாய்க் கலக்கிவிட்டுச் சென்றது போதாமல், அந்த மடமயிலுக்கு நேர்ந்த ஆபத்திலிருந்து நானே அவளைக் காக்கும்படியான சந்தர்ப்பத்தையும் தந்த அந்த வள்ளலின் ஆற்றலை என்னென்றியம்புவேன்? ஆ! யாரோ தண்ணீரில் விழுந்துவிட்டார்கள் என்று எண்ணி ஜீவகாருண்யத்தினால் காப்பாற்றச் சென்றவிடத்தில் அந்த வனிதாரத்தினமா விழுந்திருக்கவேண்டும்? அந்தோ! என் மனத்தை மாற்றவேண்டும் என்று நான் முயற்சித்து மன்றாடி வருகையில் அவளை என் கரத்தினாலேயே எடுத்து, என் மார்போடணைத்து, படகில் விடும்படியான சந்தர்ப்பத்தைக் கைகாட்டிய கடவுளின் திருவருளை என்னாலியம்பலாகுமோ? ஆஹா! அவளுடைய பஞ்சுபோன்ற மேனியும், மணம் கமழ்ந்த மெல்லிய சுவாசமும் என்மேல் படும்பொழுது என்னுள்ளம் பூரித்ததற்கு இந்த புவனமே ஈடாகாதென்றால் வேறு கூற வேண்டுமோ! இவையெல்லாம் தெய்வாம்சத்தினால் தெய்வீகமாய் உண்டாகும் அனுபவங்களேயன்றி வேறில்லை. நான் இந்த வைத்தியத் தொழிலில் இறங்கியபின்னர் எத்தனையோ ஸ்திரீகளை என் கையால் தீண்டிப்பார்த்து ஔடதம் கொடுத்திருக்கிறேன்; எத்தனையோ சிகிச்சை செய்திருக்கிறேன். அப்போதெல்லாம் என் மனம் களங்கமற்றுத் துல்லியமாய் விளங்கியதென்ன! இன்று அந்த மடந்தையை எடுத்துப் படகில்விட்ட அந்தச்சொற்ப நேரமும் பெரிய தேவாம்ருத விருந்து உண்பவன்போல் என்மனம் ஆநந்தமடைந்ததென்ன! ஆகா! இவைகளையெல்லாம் நினைக்க நினைக்க ஈசா உன்னுடைய மாயாவதார மகிமையை என்னால் அறியக் கூடவில்லையே! ஒருவாரமாக நான் இந்த விஷயத்தை என் நண்பர்களுக்குத் தெரியாமல் அடக்கியே வந்தேன். இன்று நிகழ்ந்த சம்பவத்திலிருந்து என்னுடைய தேகம் கேவலமான நிலைமையை யடைந்துவிட்டதே! இதை எவ்வாறு பிறரறியாவண்ணம் மறைக்கக் கூடும். இந்த விஷயத்தைப் பிறரிடம் சொல்வதற்கு

வெட்கமும், கிட்டாப் பொருள்மீது கடுமையல் கொண்டுள்ள அவமானமும், ஏமாற்றமும் என்னைப் பாதிக்கின்றனவே! ஆ! நானோ கேவலம் ஏழ்மைஸ்திதியை யடைந்தவன். அந்த மாதரசியோ பெரிய கோடீச்வரனின் மகள்போலக் காணப்படுகிறாள். நான் கொண்டுள்ள எண்ணமானது நீரில் பிரதி பிம்பிக்கும் நிலவைக்கண்டு அதனைப் பிடிக்கப்போகும் சிறிய குழந்தைகளின் செய்கையைப்போலல்லவா இருக்கின்றது? ஆஹா! இந்த மனதிற்கு இத்துணை நாளிருந்த உறுதி இந்த ஒருவாரமாகவும் மீண்டும் இன்று அடியோடும் தளர்ந்துவிட்டதே. அந்தோ! இந்த மனத்தை நான் எவ்விதம் திருப்புவேன்? ஏ ஜகதீசா! உன்னையே சதா நம்பி உள்ளம் குளிரப் பஜனை செய்துகொண்டிருந்த என் மனத்திற்கு இந்த உபத்திரவத்தை ஏன் உண்டாக்க வேண்டும்? இது உன்னுடைய கூத்தன்றோ? உன்னை ஜபித்திருந்தாலும் அந்த மாதின் உருவமும் அதனால் உண்டான அவஸ்தையும் பெருகிக்கொண்டே வருகின்றதே. என்ன செய்வேன்? போஜனத்திற்குச் சென்ற எனது நண்பர்கள் வரும் நேரமுமாய்விட்டதே'' என்று கூறியவண்ணம் மணியைப் பார்த்தான். மணி ஒன்பது ஆய்விட்டது கண்டு ''ஆ! இதென்ன ஒருகால் சாப்பாடு விஞ்சிவிட்டதோ இன்னும் எங்கேயாவது அலைகின்றார்களோ'' என்று வருந்தியவண்ணம் எழுந்து மெல்ல உட்கார்ந்தான்.

அதே தருணத்தில் போஜனத்திற்குச் சென்ற நண்பர்களிருவரும் அங்கு வந்து சேர்ந்தார்கள். வந்தவர்கள் சுந்தரன் உட்கார்ந்திருப்பதைக்கண்டு மகிழ்ந்தவர்களாய், ''என்னப்பா சுந்தரம்! உடம்பு எப்படியிருக்கின்றது? நாங்கள் சென்று வெகுநேரமாய்விட்டது. இன்னேரம் தூங்கினாயா என்ன செய்தாய்?'' என்றார்கள்.

அதைக்கேட்ட சுந்தரன் தணிவாய்ப் பேசத்தொடங்கி 'இன்னேரம் என்ன தாமதம்? சாப்பாடு மிஞ்சிவிட்டதா கிடைத்ததா!'' என்று கேட்டான்.

சிவரா:— சாப்பாட்டிற்காக நேரமாகவில்லை. என்னுடைய தமயனார் வந்திருக்கிறார். அவரை வழியில்கண்டேன். இப்போதுதான் வருகிறாராம். அவரையுங்கூட அழைத்துச்சென்று உண்பித்து என் அறையிலே கொண்டு விட்டு இதோ நேரே வருகிறேன். நீ இந்தப்பாலைமாத்திரம் பருகினால் போதும்'' என்று பலாத்காரம் செய்தான். பிறகு சுந்

தரன் அதைத் தள்ளமாட்டாமல் இரண்டொருவாய் அருந்தி வைத்து விட்டான். சிவராமன் பின்னும் பேசத்தொடங்கி "சுந்தரா! உனக்கு இப்போது முற்றும் குணந்தானே, நான் என் ஜாகைக்குப்போக முற்றும் மனம் வரவில்லை என்றாலும் தமையனர் அங்கு தனித்திருப்பதனால் போகவேண்டியிருக்கிறது. உனக்கு இப்போது ஒன்றுமில்லையே?" என்றான்.

சுந்:—எனக்கு ஒன்றுமில்லை. தாங்கள் சென்று வாருங்கள். நானும் சற்று அயர்ந்து தூங்குகிறேன்—என்றான். உடனே இருவரும் எழுந்து போய்விட்டார்கள்.

சுந்தரன் தன்னால் இயன்றமட்டும் துயிலுவதற்கான முயற்சிகளைச் செய்து பார்த்ததெல்லாம் வீணாயின. புத்தகத்தைக் கையிலெடுத்தால் அது மெத்த அருவருப்பை உண்டாக்கியது. புஸ்தகத்தினால் அவனுடைய மனோவியாதி ச்வஸ்தப் படுவதாகக் காணப்படவில்லை. சற்றுநேரம் அப்படி இப்படி புரண்டுபார்த்தான். இவன் மனத் தவிப்பு அதிகரித்ததேயன்றிக் குறையும் வழி ஏற்படவில்லையாதலால் அவன் சரேலென்று எழுந்து கதவைப் பூட்டிக்கொண்டு வீதியில் வந்தான். அவனுக்கு எதுவும் தோன்றவில்லை. தான் இவ்வாறு பாதைப்பட்டுத் தவித்து வதைப்படுவதை மாற்றும் பொருட்டு ஸ்ரீபார்த்தசாரதி ஸ்வாமி கோயிலுக்குச்சென்று தரிசனம் செய்து அப்படி அந்த வழியில் மனத்தை மாற்றிக்கொண்டு வருவோம் என்று உறுதி செய்துகொண்டு கோயிலையடைந்தான்.

அன்று ஏதோவிசேஷநாளாகையால் ஜனநடமாட்டம் அதிகமாகவே காணப்பட்டது. சுந்தரன் நேரே சன்னிதியை யடைந்து நமஸ்காரஞ் செய்துபார்த்தஸாரதிப்பெருமாள்முன் மண்டபத்திலேயேஎழுந்தருளி ப்ரம்மாநந்தமான சேவை சாதித்துக்கொண்டு தேஜோ மயாநந்த திங்களின் ஜோதியாக வீற்றிருந்த மகிமையைக் கண்ட சுந்தரன் அப்படியே சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி"என்னப்பனே! ஜகத்ரக்ஷகா! சரணம் பணிந்தேன். ஆஹாஹா! உன்னுடைய திருக்கோல எழிலை என்னென்று புகழ்வது? அடடா இன்று என்ன விசேஷமோ, வேணுகான சாத்துப்படி சமர்ப்பித்திருக்கின்றார்கள். என்னப்பா! ஆபத்பாந்தவா! அநாத ரக்ஷகா! நித்யகல்யாணகுண நிர்மல ஹ்ருதயா! தீன பந்தோ! தயாஸிந்தோ! பார்த்தஸாரதே! அக்காலத்தில் கோகுலத்தில் நீ

வேணுகானம்செய்த காட்சி இவ்விதந்தானிருந்ததோ! ஆஹா! ஆனிரை மேய்ந்தாட, ஆச்சியர் மகிழ்ந்தாட, வானவர் துதித்தாட வளர்கன்றோடி யாட, தேனதாய்க்குழலை யூதும் கோபாலன் சிரமாட, கானத்தினிசை யோங்கி மானிலமுற்றுமாட, நெற்றியில் திலகமாட, நீலமயில் தோகை யாட, முத்துமாலை யசைந்தாட, முற்றிலும் அணிகளாட, சுற்றிலும் பக்தராட, சொருசுபீதாம்பரமாட, ஒற்றையுருமாலாட, உல்லாசக் கண்ணனுட, மறையவர் வேதம்பாட, மங்கையர் மங்களம்பாட, பால கர்களித்து ஆட, பல்லாயிரர் புகழ்பாட, மங்கள ஆரத்தியோடு இங் கித மணியுமாட, பங்கயமலர்த்தாளாட, பரமனின் எழிலுமாட, அகண்டாகாரமாய் விளங்கும் ஆதிமூலமே! வேதஸாரமே! பஞ்சவர்க் கபயந்தந்தசூரனே! அண்டசராசரத்தையும் உண்டுகளிக்கும் உரக சயனு? தொண்டன் எனக்கு இத்தகைய மனவேட்கையை அளித்தல் முறையோ? உலகமாயையில் வீழ்ந்து உழலாமல் ஒரே மனத்துடன் உன்னடியைச் சேர எண்ணிய என்னை இத்தகையவலையில் ஏன் வீழ்த்தவேண்டும்? உன் மாயையைக் கண்டார் யாவர்! ஏ பரம் பொருளே! இப்போதே என்னுசையை விலக்கி யாட்கொள்வாய். இது உனக்கு அரிதாகுமா? அந்தோ! நான் உன்னை வேண்டவேண்ட என் மனதிற்கு உன் தரிசனும்ருதம் ஊட்டிக்கொண்டிருக்கையில் கூட என் மனத்தை மாயையால் மறைத்து அந்த எண்ணத்தையே உண்டாக்கு வது தகுமா? உன்னுடைய அழகிய பத்மம்போன்ற முகாரவிந் தத்தைத்தரிசிக்கும்போது பத்மம்என்ற அவளுடைய நாமம் எனக்கு முன்னுல் நினைவிற்கு வருகின்றதே. முகந்தான் பத்மத்தைப்போல இருக்கின்றதேயென்று உன் விழியின் எழிலை நோக்கினுலோ அது வும் பத்ம இதழைப்போலவே இருக்கின்றது. அதுதானப்படி என்று உன்மார்பை நோக்கினுலோ பத்மத்தினுலான மாலையையே பெரிதாக சமர்ப்பித்துக்கொண்டிருக்கிருய். அதை விடுத்துப் பாதத்தை நோக்கி னுலோ அதுவுமா பத்மமலரைப் போலவே இருக்கவேண்டும். அதை யும் விடுத்துப் பூமியைநோக்கி நின்று உன்னுமாவைமாத்திரம் துதி செய்வோமென்றுலோ பூமியில் அழகிய தாமரைப் பூக்கோல மிட்டிருக்கிருர்கள்; எந்தப் புண்யவந்தர்களோ தெரியவில்லை. நான் எதைக் கவனித்தாலும் பத்மத்தின் நினைவையே மூட்டுகின்றதான பொருள் என் கண்ணெதிரில் தென்பட்டு என்னை அந்த நாமாவிலிருந் தே நிலைகலங்கச் செய்கின்றதே. இதுவும் உன் திருவிளையாடலின்

மாயையல்லவா? அவளை அவள் தந்தை ஏன் என்னெதிரில் 'ஏன்பத்மம்' என்று பெயரைக் குறித்துக் கூப்பிடச் செய்யவேண்டும்? அதுவும் உன்வேலைதானே? அந்தப்பெயர் எனக்குத் தெரியாமலிருந்தால் அந்த நினைவு இங்குக் காண்பதனால் உண்டாகாமலிருக்குமல்லவா? அடடா! இங்கு வந்தவிடத்திலும் என்னைப் பரிக்ஷிக்க வேண்டுமா! ஏ ஸாரதே! என் கண்ணைமூடிக்கொண்டு தோத்திரம் செய்யலாமென்றாலோ கண்ணைமூடினால் கடலில் அவளைக் கட்டியணைத்த சம்பவம் எதிரில்வந்து தாண்டவமாடுகின்றதேயன்றிப் பாவிமனதிற்கு நின் காட்சி மறைந்து விடுகின்றதே! என்செய்வேன்? சர்வலோக சரண்யா! என் சஞ்சலத்தைத் தவிர்க்க உன் மனமிரங்க வில்லையா? ஏ கருடவாகனா! கமல நேத்ரகாருண்யா!

விற்பெருவிழவும் கஞ்சனும் மல்லும் வேழமும்பாகனும் வீழ
செற்றவன் தன்னைப் புரமெரிசெய்த சிவனுறு துயர்களை தேவை [னைச்
பற்றலர் வீயக் கோல் கையில்கொண்டு பார்த்தன் தன்தேர் முன்நின்று
சிற்றவைபணியால் முடிதுறந்தானைத் திருவல்லிக்கேணிக் கண்டேனே.

—பெரிய திருமொழி.

என்னப்பனே! பார்த்தனுக்குத் தேர்முன் நின்று உதவிபுரிந்த உனக்கு என் மனத்தை மாற்றல் அரிதா! என்மனத்தைப் பலவிதத்திலும் கெடுத்து என்னைக்கேவலம் துர்ஜனனுக்காமல் இப்போதே என் மனத்திற்கு ஒருமாற்று அளித்துவிட உனக்கென்ன யோசனை? உன்னை நான் நம்பித் துணைகொண்டதற்கு என்னை இவ்வாறு விட்டுவிடலாகுமா?

துப்புடையாரை யடைவதுஎல்லாம் சோர்விடத்துத் துணையாவரென்றே
ஒப்பிலேனாகிலும் நின்னடைந்தேன் ஆனைக்குநீ அருள்செய்தமையால்
எய்ப்புஎன்னைவந்து நலியும்போது அங்குஏதும் நானுன்னை நினைக்கமாட் [டேன்
அப்போதைக்கிப்போதே சொல்லிவைத்தேன் அரங்கத்தரவணைப் [பள்ளியானே

—பெரியாழ்வார் திருமொழி.

எனக்கு உன்னையன்றி உற்ற துணை வேறுண்டோ? நீயே என்னுடைய உயிர் நிலையாக இருக்கும்போது என் மனத்தில் வேறொரு அநித்ய வஸ்துவைப் பதியச்செய்து அதன் மூலமாய் என்னை உலகத்தில் உழலவைத்துச் சகல பாபங்களுக்கும் இலக்காகி

மனத்தைக்கெடுத்து உன்னை மறந்து உருவெளித்தோற்றத்தை நினைத்துக் கேவலம் பித்தனுக்காமல் என் மனத்திற்கு ஓர் ஆறுதலை யளிக்க மாட்டாயா!'' என்று சுந்தரன் பலவாறு தனக்குள் தோத்திரித்துக் கொண்டிருக்கையில் பெருமாள் அமுது செய்வதற்காக அங்குள்ள ஜனங்களை விலக்கிவிட்டுத் திரை சாற்றப்பட்டது.

உடனே சுந்தரன் அவ்விடத்தைவிட்டு வேதவல்லித் தாயார் ஸந்நிதியை அடைந்தான். அங்குத் திருக்காப்பு நீக்காமலிருக்கக்கண்டு மனம் வருந்திக் கண்ணீர் விட்டவண்ணம், "ஹே ஜகன்மாதா! த்ரு புவன ரக்ஷகி! உன்னுடைய சேவை எனக்குக் கிடைக்காத பரமபாவியாகிவிட்டேன். என்னம்மையே! உன் முகாரவிந்தத்தைத் தரிசித்து அதனால் என் சித்தத்தைமாற்றிக்கொள்வோம் என்று வந்தால் முதலுக்கே மோசமாய்விட்டதே. பாவியேன் ஏழை என் செய்வேன்? கையில் நிவேதனப் பொருளாகிலுமிருந்தால் அர்ச்சகர்களைக்கொண்டு திருக்காப்பு நீக்கித் தரிசனம் செய்துகொண்டு செல்லலாம். நானோ பெரிய வைத்தியர்கீழ் அடிமையாகப் பிழைக்கிறவன். எனக்கு எவ்வித சுதந்தரமுமில்லாமல் பரதந்தரியாக இருப்பதையறிந்த நீயும் என்னைப் பாராமுகமாய்த் தள்ளிவிட்டுக் கதவைத்தாளிட்டுக்கொண்டாயோ? அந்தோ! நான் அர்ச்சகரைக் கதவைத் திறக்கும்படிக்குக் கூறுவோமென்றால் எனக்கு அன்று வேறொரு கோவிலில் நடைபெற்ற விஷயம் நினைவிற்கு வருகிறதே. இக்காலத்தில் பணமல்லவா பேசுகின்றது? மனிதருக்கு மனிதர் எவ்வகையிலும் பிரதானமாவது கிஞ்சித் மதிப்பாவது கிடைக்கவே கிடைக்காது. பணத்தை நீட்டினால் மாத்திரம் எந்த ஜாதியாராகவிருந்தாலும் அவர்களை ஸந்நிதியின் கர்ப்பக்ரகத்திற்குள் அழைத்துச்சென்று தைலக்காப்பு சாத்தியிருந்தால்கூட அதைச் சட்டைசெய்யாமல் வெளியிலிருப்பவர்களை விரட்டிவிட்டுத் திரையை நீக்கித் தரிசனம் கிடைக்கும்படி ஒரு ஜாமநேரம் கற்பூர ஆரத்திசெய்து சேவை செய்விக்கிறார்கள். பணமில்லாமல் வேற்று மனிதன் எவ்வளவு சிஷ்டனாக விருந்து ஸந்நிதிக்குச் சென்றாலும் அவனைச்சட்டை செய்பவர்கள் யாவர்? அந்தோ! அன்று அந்தக் கோயிலில் நான் பரதேசிபோலத் தயங்கித் தயங்கி நின்றதையும் அங்குள்ள அர்ச்சகர் பார்த்திருந்ததையும் நான் கவனித்தேன். உடனே ஒரு பெரிய லக்ஷாதிபதியும் அவனுடைய மனைவியும் சிமைக்கமல மயமாய் வந்து ஸந்நிதியில் நிற்பதற்குள் பட்டர் எழுந்து விழுந்தடித்

துக்கொண்டு, தலைவிழத் துணியவிழ தட்டித் திணறி ஸந்நிதியில் ஓடித் தட்டை எடுத்துக்கொண்டுவந்து அவர்களுக்கெதிரில் நீட்டிய படி பல்லிளித்துக்கொண்டே நின்று அர்ச்சனை முதலியவைகளைச் செய்து சடகோபத்தை அவர்கள் தலையில் ஒருஜாமம் கவிழ்த்துவைத் திருந்து சுவாமிமீது புஷ்பமில்லாவிட்டாலும் போகிறதென்று அவர் திருமேனியிலிருக்கும் புஷ்பத்தைக் களைந்து அவர்களுக்குக்கொடுத்து உபசரித்து அனுப்பியதையும் என் கண்ணால் பார்த்தேன். எல்லா வற்றிற்கும் பணமல்லவா காரணம்? மேலும் அப்போது கார்த்திகை தீபம் கழிந்து ஸ்வாமிக்குத் தைலம் சமர்ப்பித்து ப்ரத்தியேகமான திரை சார்த்தியிருந்ததை விலக்கிவிட்டு அந்த லக்ஷாதிபதிக்குச் சேவை சாதிக்கச்செய்து அனுப்பியதையும் என்னைக்கவனிக்காமல் தள் ளியதையும் நினைத்தால் என் மனம் வருந்துகின்றது. ஆனால் இந்தக் கோயிலின் பட்டர்கள் நான் பார்த்தவரையில் ஒருவராவது அவ்வித மிருப்பதாகவும்—இருந்ததாகவும்—தெரியவில்லை. ஆயினும் தற்சமயம் கர்ப்பூர ஆரத்தி செய்வதற்குக் கூட கையில் திரவியமில்லாமல் வந் திருக்கும் நான் எப்படி ஸந்நிதியைத் திறக்கச்சொல்வது? கையில் பணமிருந்தாலும் இல்லாவிட்டாலும்பகவானுடைய சேவைஎல்லோருக் கும் பொதுவாகவிருப்பினும் காலவியல்புக்கேற்றவாறு நம் கையில் யாதாயினும் நிவேதனப் பொருளிருந்தால் அதற்காகக் கதவைத் திறக்கச்சொல்வது தருமம். அதைவிடுத்து வெறுங் கையுடன் வந் திருக்கும் நான் அலுத்து உட்கார்ந்திருக்கும் பட்டரை எவ்விதம் மனங்கூசாது தாள் நீக்கச்சொல்வது? நமக்கு எவ்வளவு தான் தாக்ஷ ண்யமுள்ள மனிதராக விருந்தாலும் பணத்தினுதவி யில்லாவிட்டால் சொல்ல மனங்கூசுகின்றதே.பணத்திற்கிருக்கும் மகிமை வேறெதற்கு மில்லை என்றல்லவா காலவியல்பில் முறையாக வந்துவிட்டது. பண முள்ளவர்கள்எந்த ஜாதியினராக இருந்தாலும் அவர்கள்மேன்மையுள்ள வர்களாக ஆய்விடுகிறார்கள். அத்தகைய பணமில்லாமல் வந்திருக்கும் எனக்கு எப்படி அம்மன் தரிசனம் சுலபமாகக் கிடைக்கும்? அம்பா! வேதவல்லி! நீஎல்லோரையும் சமமாகப் பார்க்கவேண்டுமல்லவா? உன் னுடைய அருள் மாரி சொரிவதற்கு எந்தக் கபாடத்தையும் நீக்க வேண்டிய அவசியமில்லையல்லவா! என்னம்மணி! ரங்கநாயகி!'' என்று சுந்தரன் பலவாறு ஸ்தோத்திரஞ்செய்து கண்ணீர்விட்டு எண்ணமிட்ட வண்ணமிருந்த அச்சமயம் ஒரு லக்ஷாதிபதி பெரிய சால்போல் வயிற்

றைச் சுமந்துகொண்டு தேங்காய்த் தலையுடன் நான்கடி உயரமும் அதற்குச் சரியான பருமனுமாய் நடக்கமாட்டாமல் ஆடி ஆடி நடந்து கொண்டு அடித்தொண்டையால் "ஸ்வாமுலவாரு எக்கடஉன்னாரண்டி, ஸந்நிதிலோ தலுபுவேசியுன்னதே" என்று சொல்லிக்கொண்டே வருவ தைக்கேட்ட பட்டர், உட்கார்ந்தபடியே சற்றுக் கண்ணயர்ந்த சமயமா யிருந்தவர், திடீரென்று எழுந்து "ரண்டி, ரண்டி; தலுபு தொஸ்தா னண்டி" என்று கூறியவாறு ஸந்நிதிக் கதவைத் திறந்தார். அப்போது சுந்தரன் மட்டற்றமகிழ்ச்சியோடுதானும் உட்சென்று "என்னம்மணி! வேதவல்லி! எவ்விதத்திலாவது தரிசனம் கிடைத்தால் போதும் என்று ஏங்கிய எனக்கு "பூவோடு சேர்ந்த நாறும் மணம் பெறும்" என்றபடி அந்த லக்ஷாதிபதியின் புண்ணியத்தில் உன் தரிசனம் கிடைத்ததே அதுவும் என் நற்காலந்தான். கமலலோசனி! நித்யகல் யாணி!" என்று சுந்தரன்தோத்திரம்செய்துகொண்டிருக்கையில்அங்கு பட்டர் அர்ச்சனை செய்யத்தொடங்கினர். சுந்தரன் பார்த்தசாரதியைச் சேவித்தகாலத்தில் பத்மத்தைக் கண்டு சித்தங்கலங்கி இங்கு வந்து தரிசனஞ்செய்யும் சமயம் பட்டர் அர்ச்சனை பண்ணவாரம் பித்ததில் 'பத்மம், பத்மம், பத்மம்' என்ற சப்தமே அவன் காதில் அதிகமாக விழுந்தது. உடனே அவனுக்குச் சித்தம் மாறிவிட் டது. "அடடா! சற்று மறந்திருந்ததாக எண்ணினேமே; மறுபடியும் அதே நாமத்தை உச்சரித்து எனக்கு பழைய நினைவை விளைவித்து விட்டாயே! ஏ ஜகத்ரக்ஷகி! ஜயலக்ஷ்மி! எனக்குக் கிட்டற்கரிதான பெண்ணின்மீது இத்தகைய மோகத்தை உண்டுபண்ணினால் நான் அதை எங்ஙனம் அடைதல்கூடும்? எனக்குத் தகுந்தவாறு ஆசையை அமைக்கலாகாதா? தாங்கமாட்டாத சுமையை ஏற்றுவதுண்டா? தேவி! உன்னருளால் என் எண்ணத்தை மாற்றிவிடலாகாதா?" என்று வேண் டிக்கொண்டிருக்கையில் அர்ச்சகர் தீர்த்தப்பிரசாதமளித்து ஸந்நிதிக் கதவை மூடவாரம்பிக்க எல்லாரும் வெளியே வந்துவிட்டார்கள்.

சுந்தரன் அம்மனை வணங்கிவிட்டுத் தேவப்பெருமாளைத் தரிசித் துக்கொண்டு,தெள்ளிய சிங்கர் த்வஜஸ்தம்பத்தை ப்ரதக்ஷணம்செய்து ஸந்நிதி முன்வந்து "என்னப்பனே தெள்ளியசிங்கமே! சிறுவனைக் காத்த சிங்காரதீரா! பரம வாத்ஸல்யகுண நாதா! நாயேனுக்கு ஒரு உறுதியளிக்க முன்வரமாட்டாயா?

பள்ளியி லோதி வந்ததன் சிறுவன் வாயில் ஓராயிர நாமம்
ஒள்ளியவாகிப் போத ஆங்கு அதனுக்கு ஒன்றுமோர் பொறுப்பிலனுகி
பிள்ளையைச் சீறி வெகுண்டு தூண்புடைப்பப் பிறையெயிற் றனல் விழி
[பேழ்வாய்
தெள்ளிய சிங்கமாகிய தேவைத் திருவல்லிக்கேணிக்கண்டேனே.

பக்தகோடிகளைக் காக்கும் பரமதயாநிதே! தீனபந்தோ! என்னப்பனே! என் மனத்தை மாற்ற மருந்தளிப்பாயா?" என்று தோத்திரம் செய்துகொண்டு சூடிக்கொடுத்த சுடரொளியாளைத்தரிசனம்செய்து, ஆளவந்தாரைப் பணிந்து பெரிய ஸந்நிதிக்குள் சென்றான். ஆஹா! அகண்டாகாரமாய் ஆதிமத்யாந்தரஹிதராய் நித்யமங்கள விக்கிரகமாய் எழுந்தருளியிருக்கும் (மூலவர்) ஸ்ரீபார்த்தசாரதியையும், அன்னை ருக்மணியையும், பலராமன், ப்ரத்யும்நன், அநிருத்தன் முதலியோரையும் தரிசனம்செய்து மெய்மறந்து "ஏ கருணாகரா! பரமபாவனா! பாப விமோசனா!"

பக்தாபாய புஜங்க காருடமணிஸ்த்ரைலோக்ய ரக்ஷாமணிர்
கோபீலோசன சாதகாம்புதமணிஸ் ஸௌந்தர்ய முத்ராமணிய:
காந்தாமணி ருக்மணீ - கநகுசத்வந்த்வைக பூஷாமணிச்
ச்ரேயோ தேவசிகாமணிர் திசதுநோ கோபால சூடாமணி:

என்னம்மணி! அன்னைருக்மிணி! உன்னை பணிந்தேன். உன்னையல்லால் வேறு உற்றவர் எனக்குண்டோ! எண்டிசையோரையும் ஈன்றவள் நீயன்றோ! எனக்கு ஓர் ஆறுதல் மொழியுரைத்து என் மனத்தை மாற்றிவிடலாகாதா! என் தாயே! என்னப்பனே! பரமதயாகராகர சுருணாகரா!

சத்ருச் சேதைக மந்த்ரம் ஸகலமுபநிஷத் வாக்ய ஸ்ம்பூஜ்யமந்த்ரம்
ஸம்ஸா ரோத்தாரமந்த்ரம் ஸமுபசித தமஸ்ஸங்க நிர்யாண மந்த்ரம்
ஸர்வை ச்வர்யைக மந்த்ரம் வ்யஸந புஜக ஸந்தஷ்ட ஸந்த்ராண மந்த்ரம்
ஜிஹ்வே ஸ்ரீக்ருஷ்ணமந்த்ரம் ஜபஜபசததம் ஜந்ம ஸாபல்யமந்த்ரம்.

உன்னுடைய நாமத்தை ஜபித்தாலும் சத்ருக்கள் விலகிவிடுவதாகப் பெரியோர் கூறக் கேட்டுள்ளேன். உன்னுமாவை எப்போதும் ஜபித்திருந்தும் என்னைமாத்திரம் அந்தச்சத்ருவாகிய மாரன் வாளிக்கு ஆளாகும்படிச் செய்து வருத்துவது தகுமோ? இது முறையோ? சர்வலோக சரண்யா! அந்த எண்ணத்தைக் கட்டோடு நான் ஒழிக்கும்

படியாக அருள் பாலிப்பது அரிதாகுமா? இந்த மனவேதனை யுடன் எத்தனைநாளைக்குத்தான் வருந்தவேண்டும்? அப்பனே! பார்த்த ஸாரதே!" என்று தோத்திரம் செய்தவாறு ரங்கனாதர் ஸந்நிதி நெருங்கிக் கதவருகில் நின்று "என்னப்பனே ரங்கப்ரபோ! ராஜீவலோசனா!" என்று பலவாறு துதித்து, சக்ரவர்த்தித் திருமகன் சந்நிதியை யடைந்து "ஏ ராமப்ரபோ!

பரதனும் தம்பி சத்துருக்கனனும் இலக்குமனோடு மைதிலியும்
இரவும் நன்பகலும் துதிசெய்யநின்ற இராவணாந்தகனை எம்மானை
குரவமே கமழும் குளிர் பொழிலூடு குயிலோடு மயில்கள் நின்றால
இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தரியாத் திருவல்லிக்கேணிக்
[கண்டேனே.

தீனசரண்யா! குடும்ப சமேதராய் எழுந்தருளி யிருந்து காட்சி கொடுத்துக் களிக்கச்செய்யும் பரம்பொருளே! எனக்கோர் ஆறுதலளிக் கலாகாதா! ஏ ஜானகி! நீ யாகிலும் எனக்குக் கடைக்கண்ணால் கருணை செய்யமாட்டாயா!" என்று பிரார்த்தித்துக்கொண்டே ஸந்நிதியை விட்டுத் திரும்பி ஹனுமானையும் ஆழ்வாராசாரியர்களையும் ஸேவித்துக் கொண்டு வெளியில் வந்தான். அப்போது பார்த்தசாரதிக்குத் தீபாராதனை ஆகிக்கொண்டிருக்கக் கண்டு ப்ரம்மாநந்தமாகச் சேவித்து "ஹா! ஹா! என்ன அத்புத சேவை! என்னப்பா சாரதே! உன்னை விட்டு வெளியில்செல்ல யாருக்காவது மனம் வருமோ! அடடா! என்ன அருமையான சேவை! என்று மெய்ம்மறந்து நின்றான்.

அதற்குள் அங்குள்ள கும்பல் கலைந்துவிட்டது. ஸந்நிதித் திரையும் மூடப்பட்டது. உடனே சுந்தரனும் அரைமனதோடு அவ்விடத்தைவிட்டுத் தன் ஜாகையைநோக்கி நடக்கலானான். அப்போது இரவு 11 அல்லது 12 மணி ஆய்விட்டபடியால் வீதியில் சந்தடி யடங்கி நிச்சப்தமாக விருந்தது. சுந்தரன் ப்ரதக்ஷணமாகத் துளசிங்கப்பெருமாள்கோயில் தெருவின் வழியாகச் சிங்கராச்சாரி தெருவையடைந்து நல்ல தம்பித் தெருவிலுள்ள தனது ஜாகையை அடைந்தான். அவன் மனத்தில் பார்த்தசாரதிப் பெருமாளின்கண் கொள்ளாக்காட்சி யொருபுறம் பரவசப்படுத்துகின்றது. அதோடு பத்மவல்லியின் நினைவும் பாதிக்கின்றது. அவன் மனம் தெளிவடையாமல் தத்தளித்தவண்ணம் தன்மஞ்சத்தில் சயனித்தான். அவன்

புத்தி, எந்த விதத்தில் திருப்பினும் அவைகளிலெல்லாம் செல்லாமல் அன்று மாலையில் நடந்த சம்பவத்திலேயே பதிந்து கிடந்து "ஆஹா! என்ன செய்வேன்! ஏ கண்காள்! மனமே! உங்களுக்கு இத்தனைநேரம் ப்ரம்மாநந்தமாக விருந்திட்டு அழைத்துவந்தும் நீங்கள் அதனை விலக்கிவிட்டுப் பழைய நினைவை எண்ணி ஏன் வருந்துகிறீர்கள்? பாழும் மனது ஓர் உறுதி கொள்ளாமல் என்னை இவ்விதம் வருத்துகின்றதே! ஏ மாதரசி! உன்னுடைய சக்திதான் என்ன சக்தியோ! ஒரு விநாடிப்பொழுதில் என்னை இவ்விதம் பித்தனாக்கிவிட்டாயே! அந்தோ! இந்த ஒருவாரகாலமாய் உன்னை மணமானவளா, மணமாகாதவளா என்று தெரிந்துகொள்ளாமலே தவித்தேன். இன்று உன்னை நான் தூக்கியணைத்துப் படகில் விடுத்த காலத்தில் உன் நாடி முதலியதைப் பார்த்தபோது உன் கழுத்தில் மங்கல்யமில்லாதது கண்டபிறகு என் மனத்தில் இன்னும் உன்மேல் கரை காணாமல் புரண்டோடும் தெய்வீகமான மெய்க் காதல் ஏற்பட்டு வருத்துகின்றதே! அந்தோ! உன்னை அத்தகைய ஆபத்துக் காலத்தில் நான்கூட வராமல் தனித்தனுப்பியது எதற்கு? உன்மேல் சென்றுவிட்ட என் மனத்தை மாற்றும் பொருட்டும், உன் கூடவே இருந்தால் மனம் இன்னும் எந்த நிலைமையை அடையுமோ என்ற பயத்தினாலுமேயாம். எனக்கு வைத்தியம் தெரிந்திருந்தும் நான் உன்னைத் தொடர்ந்துவந்து வைத்தியம் செய்யாமல் அனுப்பிவிட்டேனல்லவா? என்மனம் அதனால் பரிதாபப்படுகிறது. உன்னைவிட்டு ஐந்து விநாடி விலகமாட்டேனென்கிறது. அந்தோ! இதென்ன பரிபவம்! ஒரு வாரமாக இருந்த மனநிலைமையைவிட இன்று கேவலமான நிலைமைக்கு வந்துவிட்டதே! ஆ! நானேன் இன்று கப்பலுக்குச் சென்றேன்? அங்குச் சென்றதனாலன்றோ இந்தச் சம்பவங்களெல்லாம் நிகழ்ந்தன. எல்லாம் ஈசன் செய்யும் கூத்தல்லவா? ஆஹா! நான் ஒருகால் கூடவே சென்றிருந்தால் மனம் அவளைக் கண்டதனால் உண்டாகும் ஆநந்தத்தோடு இத்தகைய வருத்தமில்லாதிருக்குமோ! ஐயோ! பாவியேன் செல்லாமல் ஏதேதோ எண்ணி ஏமாந்துவிட்டேனே. அடடா! அந்தச் சுந்தரியின் உயிர் இருக்கின்றதோ இல்லையோ தெரியவில்லையே! அவள் நாடியைப் பார்த்தபோது வெகு பலஹீனமாகக் காணப்பட்டதே. இன்னேரம் அவளுடைய நிலைமை எவ்வாறிருக்கின்றதோ தெரிய

182832

வில்லையே! ஐயோ! ஏ ஜகன்மோகனங்கி! உன் காதல் என்னும் பெரிய கடலில் கட்டுமரம்போல் நான் கரைகாணுமல் அலைந்து தவிப்பது உனக்குத் தெரியுமா? ஆஹா! நான் இவ்வேதனையை எங்ஙனம் பொறுப்பேன்? பாழும் பொழுதும் இன்னும் புலரவில்லையே! ஏ மாதரசி! உன்னுடைய ரூபலாவண்ய சிங்கார முகாரவிந்தம் என் கண்ணிடைப் பதிந்து நின்று என்னை வருத்துகின்றதே. இந்தப் பாதை எனக்கு ஏற்படும் என்று தெரிந்திருந்தால் நான் உன்னேடுகூடவே சென்றிருப்பேனே? கூடச்சென்றால் கெடுதல்நேரும் என்று வெறுமையிருந்தும் என்னை ஏன் இவ்வாறு உபத்திரவிக்கவேண்டும்? அந்தோ! எனக்கு நித்திரையுமா அற்றுவிடவேண்டும்?'' என்று பலவாறய்ப் புலம்பிக் கொண்டே யௌவன பிராயத்தின் விசேஷமான புரட்டல் தாங்காமல் அப்படியே தன்னை மீறிச் சற்றுக் கண்ணயர்ந்துவிட்டான்.

மனத்தில் எந்த நினைவோடு படுத்தானே அதே கனவு காண ஆரம்பித்துவிட்டான். பத்மவல்லியைக் காண்பதுபோலும், அவளோடு பேசுவதுபோலும் கனவு கண்டு திடீரென்று எழுந்து நாற்புறமும் சுற்றித்தாவியடித்துக்கொண்டுகதவைத் திறந்துகொண்டு வீதிப்பக்கமுள்ள தோட்டத்தண்டை தூக்கக்கலக்கத்தில் சென்று கனவில் கண்டதை உண்மை என நம்பி அவளைக் காணுமையால் மனமுடைந்து“ஹா!என்னமாயம் இது? இப்போதுதானே இந்தப் பக்கம் வந்தாள். இதற்குள் எங்கே போய்விடுவாள்? ஏ மங்கையர்க்கரசியே! எங்கு சென்றுவிட்டனை? ஏ பன்னீர் விருக்ஷமே! என் மின்னிடையாளைக் கண்டனையோ? ஏ பாரிஜாதமே! என் வாரிஜாஸனியைக் கண்டனையோ? ஏ மாமரமே! என் மாமதி முகத்தினளைக் கண்டனையோ? ஏ அரச விருக்ஷமே! மாதரசியைக் கண்டனையோ? ஏ ரோஜா புஷ்பமே! என் ராஜாத்தியைக் கண்டனையோ? ஏ மல்லிகை மலரே! வில்லினைப் பழிக்கும் நுதலாளைக்கண்டனையோ! ஏபுஷ்பஜாதிகாள்!என் பூங்கொடியைக் கண்டீர்களா? ஆ! இதென்ன நாம் இந்த வாயில்லா ஜீவனுகிய மரங்களையும் செடிகளையும் கேட்டலைகின்றேம். நாம் கண்டது கனவின் தோற்றமாக விருக்குமோ?அடடா! ஏமனமே! இவ்விதமாகவா ஏமாந்துவிட்டாய்?“என்று கூறிய வண்ணம் ஏமாற்றத்துடன் கண்ணீர்பெருக உள்ளேசென்று மறுபடி படுத்தான். அவ்வாறு சற்று நேரம்புரண்டு கொண்டே இருக்கையில் கதிரவன் தனது பரிவாரமாகிய கிரணங்

களை விரித்துக்கொண்டு"என் சுந்தரா! உனக்குப்பகையாளியாகியஇரவைப் போக்கி விட்டேன். இனிமேல் நீஉன்வேலையைக்கவனி" என்று தட்டி எழுப்புவதுபோலஅர்தஅறையின் ஜன்னலால் உள்ளே பிரகாசத்தைப் புகுத்தினன். சுந்தரன் உதயமாயதைக்கண்டு தன்னை ஒருவாறு தேற்றிக்கொண்டு எழுந்து தனது நித்திய கடன்களை முடித்துக்கொண்டு ஸ்நானஞ்செய்துவிட்டுத்தனது நண்பர் வரவை எதிர்பார்த்திருந்தான்; அவர்களும்வந்துவிட்டார்கள். சுந்தரன்தெளிந்துஉட்கார்ந்திருப்பதைக் கண்டு இருவரும் மனம் பூரித்து, "என்னப்பா சுந்தரம்! உடம்பு முற்றிலும் குணமாய்விட்டதா? நாம் ஓட்டலுக்குப் போய்வருவோம்" என்று கூறினர்கள். பிறகு மூவரும்எழுந்து ஓட்டலுக்குச்சென்று சிற்றுண்டி தின்றுவிட்டு வந்ததும், இருவரும் தமது வேலையைக்கவனிக்கச்சென்று விட்டார்கள். சுந்தரன் அலுத்துப் படுத்திருந்தானே அதுதான்; வேறு எதுவும் அன்று அவனுலே செய்ய இயலவில்லை. அவன் அன்று பகலில் சைதாப்பேட்டைக்கு வருவதாக முதல்நாள் சொல்லியபடிதான் போவதா வேண்டாமா என்ற கேள்வியே மனத்தில் போராடிக்கொண்டிருந்தது. எவ்விதமேனும் அவளைப் பார்த்துவிட்டுத்தான் வருவது என்று எண்ணுகிருன் ஒருசமயம். ஒருசமயம் அங்குச் சென்றுல் தன் மனம் எவ்வித மாறுதல் அடையுமோ, அதை பிறர் கண்டு கொண்டால் தன்னுடைய நிலைமை எப்படியாகுமோ என்று எண்ணமிட்டவண்ணமே உட்காருவதும் படுப்பதுமாகவிருக்கிறுன். இதற்கிடையில் 10மணிக்கு நண்பர்களோடு சென்று போஜனத்தையும் முடித்துக்கொண்டுவந்து படுத்திருந்தான். சற்று நேரத்திற்கெல்லாம் இவன் வீட்டு வாசலில் ஒரு மோட்டார்வண்டி வந்து நின்றது. உடனே வண்டியோட்டி இறங்கிவந்து "சாமி சாமி"என்று கூவினன். சுந்தரன்யாரை அழைக்கின்றுனே என்று சும்மா விருந்துவிட்டான். பின்னும் "சாமி சாமி" என்று கூவியதைக்கேட்டு யாரை என்பதை விசாரித்தறிந்து கொள்ளலாமென்று, வீதியில் "வந்து யாரப்பா நீயாரை அழைக்கின்றுய்?" என்றுன். உடனே வண்டியோட்டி, பணிவாக ஒரு கடிதத்தை நீட்டினுன். அதை வாங்கிய சுந்தரன் பிரித்துப் பின்வருமாறு படிக்கலானுன்.

எனதன்புள்ள சுந்தரம்!

இந்தக் கடிதம் கொண்டுவரும் மனிதனேடு வண்டியில் சென்று அங்கே படுத்திருக்கும் நோயாளியைஇன்று முழுவதும்வெகு ஜாக்கிர

தையாகக் கவனித்துக்கொள். நான் மாலையில் வந்தால் வருவேன்; நிச்சயமில்லை. ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்.

இங்ஙனம்

சாமிநாதன்.

'ஸர்ஜன்'

என்ற கடிதத்தைப் படித்ததும் சுந்தரன் முகம் சற்று வாட்டமடைந்தது. "ஐயோ! நாம் இன்று அவ்விடஞ்சென்று அந்தப் பெண்மணியைப் பார்த்துவிட்டு வரலாமென்று எண்ணியதும் வீணாய்விட்டதே. நாம் வைத்தியரிடம் செல்லாமலிருந்தும் நம்மை வலுவிலழைக்கின்றாரே. நாம் எஜமானர் உத்தரவை மீறி நடக்க சாத்யமன்றே. இன்று பூராவாய் அங்கு நோயாளியுடனிருந்து பின் நாளை நாம் செல்வதற்குள் அந்தப் பெண்ணின் நிலைமை எவ்வாறிருக்குமோ! உம், எல்லாம் அவனருள். நாம் தாமதிக்கலாகாது. எஜமானன் மனம் கோணாமல் நடக்கவேண்டும்." என்றுஎண்ணமிட்டவண்ணம் உள்ளேசென்று உடையணிந்து, மருந்துகளடங்கிய பெட்டியை எடுத்துக்கொண்டு வந்து வண்டியில் ஏற அது புறப்பட்டுச் சென்றது.

கேசவமுதலியாரும் லக்ஷ்மியம்மாளும் பத்திரிகையில் மகன் விஷயமாய்ப் படித்தவுடனே மூர்ச்சித்து விழுந்து விட்டதாகக் கூறினோமல்லவா? உடனே பணிமக்கள், குமாஸ்தா முதலிய எல்லோரும் வந்து இந்த விபரீதச் செய்தியைக்கேட்டு மனந்தவித்த வண்ணம் அவர்களை மூர்ச்சை தெளியச்செய்தார்கள். இருவரும் கட்டிலடங்காத விசனமும் மனக் கொதிப்பும் மேலிட்டவர்களாய் "ஐயோ! தலைவிதியே! இப்படியும் ஒன்று பாக்கி யிருந்ததோ! அடடா! இந்த விபரீதமான செய்தி பத்மத்தின் காதில் எட்டுமாயின் அவளுடைய இப்போதைய நிலைமையில் அவள் உயிரைத் துறந்துவிடுவாளே! ஆ! என்ன செய்வேன்? இந்தச் செய்தியை அவளிடம் யாரும் கூறவேண்டாம். அம்மா இந்திரா! நீ பத்மத்தின் கூடவே யிருந்து அவளைப்பார்த்துக்கொள். எனக்கு துக்கம் தாங்கவில்லை. என் மனமும் வயிறும் கொதிக்கின்றன. நான் கண்மறைய எந்தவிடத்திலாவது சென்று படுத்திருந்து பிறகு வருகிறேன். ஐயோ! சண்டாளி நான் பெற்ற மகன்

திருடினுன் என்னும் வசைமொழியைக் காதால் கேட்டும் என்னுள்ளம் போகாமல் துடிக்கின்றதே. ஐயோ! என்செல்லப்பா! உன்னை எவ்வளவோ அருமையாய்ப் பெற்று வளர்த்து உன்னால் நாங்கள் அடைய எண்ணிய பெருமை எல்லாமற்று இவ்விதச் சிறுமையா எங்களுக்குற்றது! அந்தோ! சர்வேச்வரா! என்செய்வேன்! ஆ! என்னங்க முற்றும் பற்றி எரிகின்றதே! என்னுலிந்தக் கஷ்டத்தைத் தாங்க முடியவில்லையே!'' என்று கண்ணீர்விட்டவண்ணம் ஓரறையிலே போய்ப் படுத்துவிட்டாள். கேசவமுதலியாரும் மனந் தாங்காமல் ப்ரலாபித்துப் பின் நடராஜனையும் தமது குமாஸ்தாவையும் கூட்டி ஒரு பை பணத்தைக்கொடுத்து "அப்பா! இதை வைத்துக்கொண்டு, போலீஸ் அதிகாரிகளையும் மாஜிஸ்ட்ரேட்டையுங்கண்டுஅந்தப்பாதகனைஜாமீனில்விடும்படி கேட்டு வாருங்கள். நான் என் உயிரோடு அவ்விடத்திற்கெல்லாம் வரவே மாட்டேன். எனக்குப் பதிலாக நீங்கள் சற்றுப் பாருங்கள். 'கோடீச்வரன் பிள்ளை திருடிவிட்டானும்; அவனைக் கேட்பாரே இல்லையாம்' என்ற வசைமொழிக்கு இடந்தராமல் நம்மாலானவற்றைச் செய்து தொலைப்போம்'' என்று கூறினர். நடராஜனும் அவருடைய குமாஸ்தாவும் அதைப் பெற்றுக்கொண்டு சென்றார்கள். முதலியார் கண்ணீர்வடிய ஒரு நாற்காலியில் போயமர்ந்தார். இந்திராணி பத்மாவினிடத்திலேயே உட்கார்ந்திருந்தாள்.

அப்போது பங்களாவின் வாசலில் ஒரு மோட்டார்வந்து நின்றது. உடனே வேலைக்காரன் ஓடி வண்டியின் கதவைத் திறந்தான். உள்ளிருந்து சுந்தரன் மருந்து பெட்டியோடு இறங்கினுன். சேவகன் அவனை அழைத்துப்போய் பத்மா படுத்திருந்த ஹாலில் விட்டு முதலியாரிடம் தெரிவிக்கச்சென்றான். உள்ளேவந்த சுந்தரன் அங்கு படுத்திருந்த பத்மவல்லியைக் கண்டதும் அவன் தேகத்தில் அவனை யறியாமல் ஆநந்தமயிர்க் கூச்சலுண்டாயது. இன்னதென்று விவரிக்க இயலாதவிதமான உணர்ச்சியால் அவன் மெய்மறந்து ஸ்தம்பித்தான்; உடனே பூரித்தான்; வைத்த விழியை வாங்காமல், அப்படியே நின்றுவிட்டான். டாக்டரைக்கண்ட இந்திராணி எழுந்து அப்பால் விலகிவிட்டாள். சுந்தரன் இந்த எதிர்பாராத காட்சியைக் கண்டதும் அவன் தனது கண்ணையே நம்பாமல், "ஆ! இதென்ன! நாம் காலையிலேகண்ட கனவின் தோற்றத்

தைப்போல் இதுவும் உருவெளித்தோற்றமா, அல்லது என்னைப் பித்தனுக்கிய உத்தமிதான் படுத்திருக்கிறுளா? ஒன்றும் புலப்படவில்லையே! என்ன ஆச்சரியம்! என்னுடைய சித்தம் இப்போது தெளிவாகத்தானே இருக்கின்றது. இப்போது நான் காண்பதும் உண்மையான பத்மமாகத்தானே இருக்கவேண்டும். அடடா! ஈசனின் மாயையை என்னவென்றுரைப்பது? ஆஹா! நான் யாருக்கோ நோய் என்றல்லவா எண்ணினேன். கடைசியில் என் கண்மணியான பத்மத்தினிடமா கொண்டு வந்து விட்டார் கடவுள்! என்ன புதுமை! என்ன ஆச்சரியம்! ஆஹா! உன் மாயையை என்னிடமே பல முறைகளிலும் காட்டிவிட்டாயே!" என்று கணப்பொழுதில் பற்பல எண்ணங்களையெல்லாம் எண்ணியவனுய் நிற்குந்தருணம் முதலியார் அவ்விடம் தோன்றிச் சுந்தரனைப்பார்த்ததுதான் அவரும் அப்படியே கண்ணை நம்பாமல் நின்றுவிட்டார். பிறகு சற்று நிதானித்துக்கொண்டு, சுந்தரனைத் தாவிக் கட்டிக்கொண்டு "ஆ! தாங்கள் வைத்தியரா? நேற்று என் கண்மணியைக் காப்பாற்றிக் கரைசேர்த்த தாங்கள் வைத்தியராக விருந்தா பேசாமல் போய் விட்டீர்கள்? அடடா! எங்களோடு கூடவந்திருந்து தாங்களே சிகிச்சை செய்திருக்கலாகாதா? நேற்று எனக்கிருந்த மனநிலைமையில் என்னுல் ஒன்றுமே பேச சாத்தியமற்று விட்டபடியால் நான் தங்களை அதிகமாக உபசரிக்காமல் போய்விட்டேன். இன்று இன்னும் தாங்கள் வரவில்லையே என்று எதிர்பார்த்திருந்தேன். தாங்கள் வைத்தியராகவா வந்தீர்கள்? என்று ஆநந்தம்பொங்கக் கூறினுர்.

இதைக் கேட்ட சுந்தரன் தன் மனதில் பதிந்து கிடக்கும் ஆசையை எல்லாம் அடக்கித் தன்னை யொருவாறு தேற்றிக்கொண்டு நயமாகப்பேசத்தொடங்கி "ஐயா! நானும் இங்குவந்து தங்கள் புதல்வியையும் அன்னவரின் தோழியாரையும் கண்டதும் எனக்குண்டான ஆச்சரியத்திற்கு ஓரளவே சொல்ல முடியவில்லை. நேற்று தங்களை அந்த ஆபத்து சமயத்தில் தனித்து அனுப்புவதற்கு என்மனம் இடந்தரவில்லையென்றுலும் ஒரு முக்கியமான காரணமும் காரியமும் முன்னிட்டு நான் வருவதற்கில்லாமல் போய்விட்டதுபற்றி மிகவும் வருந்தினேன். இன்று என் வைத்தியரின் கடிதத்தைக் கண்டதும் நான் தங்கள் இல்லத்திற்குத்தானிருக்குமென்று கனவிலேகூட நினைக்கவில்லை. 'யார் வீட்டிற்கோ என்னவோ தெரியவில்லையே; இன்று

முழுதும் அங்கிருந்து ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ளுமாறு வரைந்திருக்கிறார். நான் இன்று முழுதும் அங்கேயே இருந்துவிட்டால் இங்கு வருவதற்கும் நேரமில்லையே' என்று எண்ணமிட்ட வண்ணமாகத்தான் வந்தேன். நேற்று நான் உங்கள் வண்டியைக் கவனித்துப் பார்க்கவில்லை. மேலும் இன்று வந்த வண்டியோட்டி வேறொருவனாக விருந்ததாலும் நான் அவனை யாரென்று கேட்காமையினாலும் இங்கு தான் வருகிறேனென்று தெரிய இடமில்லாமல் போயிற்று. ஈசன் செயலைப்பாருங்கள். எவ்விதமிருக்கின்றது? நேற்றிரவெல்லாம் உங்கள் குமாரிக்கும் அவர்களுடைய சிநேகிதைக்கும் எவ்வாறிருக்கின்றதோ என்ற கவலையே என் மனத்தில் குடிகொண்டிருந்தது. காலையில் எழுந்தவுடன் எனக்கு வருவதற்குச் சரிப்படவில்லை. ஈச்வரனே இப்போது கொண்டு வந்து விட்டார்." என்று கூறிக்கொண்டே தன் கையிலிருந்த பெட்டியை ஒரு மேஜையின்மீது வைத்துவிட்டு முதலியார் பக்கலில் உட்கார்ந்தான். சுந்தரன் மனத்தில் அப்போது உண்டாயிருக்கும் ஆனந்தத்தை நாம் இவ்வளவென்று வரம்புவைத்து வரைதல் அசாத்தியமென்றே கூறல்வேண்டும். ஆஹா! அவன் கண் பத்மத்தின் மீதிலேயே சென்று பதிந்துவிட்டது. அவன் கரங்கள் அவனைமீறி அந்தப் பைங்கிளியைத் தாவிச்செல்ல முயன்றன. அப்போது பத்மவல்லி அயர்ந்து துயின்று கொண்டிருந்தமையால் துயிலெழுந்த பின்னர் பார்த்து மருந்து கொடுக்கலாமென்று வெறுமனே யிருந்தான். சுந்தரன் வந்த அரைநாழிகைக்கெல்லாம் பத்மம் துயின்றெழுந்தாள். அப்போது தனக்கெதிரில் தன் தந்தையுடன் வேறு அன்னியமனிதன் வீற்றிருக்கக்கண்டு சற்று வெட்கி அப்புறம் திரும்பிக்கொண்டாள். அப்போது முதலியார் சுந்தரனைக் கைபார்க்கச் சொன்னார். உடனே சுந்தரன், அந்தக் கரத்தைத்தொடும் பாக்கியம் தனக்கு இவ்வளவு எளிதில் கிடைத்ததை எண்ணி மனம் பூரித்தவனாய், அவன் மனதில் பெருத்த கடல்போல் குவிந்துகிடக்கும் வேட்கையையொருவாறு அடக்கிக்கொண்டு மெல்லக்கட்டிலருகில் சென்றுநின்றான். ஆஹா! பத்மத்தின் பின்னழகைக்கண்ட சுந்தரன் அப்படியே அசைவற்று நின்றுபோய் விட்டான். உடனே சற்றுத் தெளிவடைந்து, அவள் அந்தப்பக்கம் திரும்பி யிருக்கின்றாளே எப்படி கைபார்ப்பது

என்று யோசித்துச் சற்றுத் தயங்கினன். மீண்டும் இந்த சந்தர்ப்பத்திலாவது அவளோடு பேசும் தருணம் வாய்ந்தபடியால் அதை நாம் இழக்கலாகாதென நினைத்து, கட்டிலடங்காத களிப்பும், பூரிப்பும்,உள்ளாழ்ந்த உண்மைக்காதலோடு பொங்கும் மனத்தைச் சாந்தப்படுத்திக் கொண்டு, மெல்ல நயமாகப்பேசத்தொடங்கி "அம்மணி! நித்திரையின் மயக்கம் இன்னும் தெளியவில்லையா! இந்தப்பக்கம் திரும்பிக் கரத்தைக் காட்டுகின்றீர்களா?" என்று கேட்டான்.

அதைக்கேட்ட முதலியார் "ஓ இன்னும் தூக்கம் தெளியவில்லையா? சரி, பிறகு தானே எழுந்திருக்கட்டும். என் உடம்பு சரியாகவில்லை;நான் இந்தப் பக்கத்துஹாலில் படுத்திருக்கிறேன். எதற்காவது வேண்டுமானல் அழைத்தால் வருகிறேன்; உங்களைத் தனித்துவிட்டுக் கவனியாமல் போவதாய் எண்ணக்கூடாது. என்னை மன்னிக்க வேண்டும். மனோபாதை, தேகபாதை ஆகிய இரண்டும் தொந்தரை செய்கின்றன. சற்றுப் படுத்துவிட்டு வருகிறேன்" என்று கூறி அவ்விடத்தைவிட்டுப் போய்விட்டார். ஏனெனில், தமது மாறுபாட்டை ஒரு நொடியில் கண்டுகொண்டு பத்மமும் காரணத்தை யறிய நேரிடும் என்று எண்ணியே அவ்வாறு செய்தார்.

தனியாக விடப்பட்ட சுந்தரன் பத்மத்தின் முகதரிசனத்திற்கே காத்துக்கொண்டிருந்தான். அவளுக்கருகில் தாதியொருத்தி தூங்கி வழிந்துகொண்டு இரவு கண்விழித்த களைப்பினுல் ஆடிவிழுந்து கொட்டாவியும் குருகுருப்புமாக உட்கார்ந்திருந்தாள். அவளைக்கண்ட சுந்தரன் "அம்மா! நீங்கள் இரவில் கண்விழித்ததாகத் தெரிகின்றது. உங்களுக்கு உங்களைமீறித் தூக்கம் மேலிட்டு மயக்குகின்றது. தாங்கள் சற்றுப்படுத்து நித்திரைசெய்து வாருங்கள். நான் இங்கேயே இருந்து வேண்டியவைகளைப் பார்த்துக் கொள்கிறேன்" என்றான். அதைக் கேட்ட அந்த தாதிக்கு தேவாமிருதம் கையில் கொடுத்துப் பருகு என்பதுபோலத் தோன்றியது. இருந்தாலும் கௌரவத்திற்கும் மரியாதைக்கும் பார்த்து, "ஐயா! எங்களுக்குக் கண்விழிப்பது க்ரமமேயன்றி ச்ரமமன்று. இந்தத் தொழிலிலிறங்கிய எங்களுக்கும் வைத்தியமுறையிலுள்ள தங்களைப் போன்றவர்களுக்கும் எல்லாம் சகஜம்தானே! இரவில் அநேகமாக எங்களுக்கு நித்திரை என்பதே கிடையாது. மேலும் எனக்கு இப்போது சேர்ந்தாற்போல 4,5 நாட்

களாக இரவிலும் பகலிலும் நித்திரை என்பதே இல்லே. ஆதலால்தான் இன்று இவ்விதம் சுழற்றுகின்றது. தாங்கள் காருண்ய குணத்தினுல் இதைக்காணச் சகியாமல் படுத்துக்கொள்ளும்படி கூறுகின்றீர்கள். இன்னும் சிலர் என்ன மூதேவித்தனம் என்று அதட்டுவார்கள். அதையும் நான் பார்த்திருக்கிறேன். தங்களுடைய பெருந்தன்மையைத் தங்களது முகமே விளக்குகின்றது. அப்போதே இந்தம்மாள் கூட என்னைப் படுத்துக்கொள்ளும்படி தான் சொன்னுர்கள். நான்தான் உட்கார்ந்திருந்தேன். வர வர ஜாஸ்தியான நித்திரை வருவதால் சற்றுப் படுத்தெழுந்து வருகிறேன். எனக்காகத் தாங்கள் ச்ரமப் படுவதற்கு மிகுந்த வந்தனம்'' என்றுள்.

சுந்தரன்:—மனிதருக்கு மனிதர் இவ்வித அற்ப உதவி கூடச் செய்யாவிட்டால் பிறகு மனிதருக்கும் மிருகத்திற்கும் என்ன வித்தியாசம்? அம்மணி! நீங்கள் பயமின்றிச் சற்று நேரம் தூங்கிவாருங்கள். நான் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்கிறேன்—என்றுன். இதைக் கேட்ட தாதி மெல்ல எழுந்து அந்த ஹாலுக்குப் பக்கத்திலிருக்கும் தனி யறையில் போடப்பட்டிருந்த விசுப் பலகையில் படுத்துக்கொண்டாள். உடனே அவளை மூத்தவள் வந்து வெகு பக்ஷத்துடன் அழைத்துச் சென்றுள். சுந்தரன் பத்மவல்லி எப்போது தெளிந்து எழுந்திருப்பாள் என்று அந்த நேரத்தை எதிர் பார்த்திருந்தான்.

பத்மவல்லி சற்று நேரத்திற்கெல்லாம் நன்றுய் நித்திரை தெளிந்து எழுந்திருந்து இந்தப்பக்கம் திரும்பிப் படுத்தாள். அப்போது அங்கு வேறு யாருமில்லாமல் தன்னெதிரில் ஒரு வாலிபன் மட்டுமிருப்பதை நோக்கி எல்லோரும் எங்கு சென்று விட்டார்கள் என்று எண்ணிச் சுந்தரனைக் கூர்ந்து கவனித்தாள். அவனுடைய அதியற்புதமான மன்மத வடிவத்தைக் கண்ட பத்மம் "இவரை நாம் இதற்கு முன் எங்கேயோ பார்த்திருப்பதாக நினைவிற்கு வருகின்றதே. இவரை எங்கு பார்த்தோம்'' என்று எண்ணமிட்ட வண்ணம் தலைகுனிந்தாள். இதைக்கண்ட சுந்தரன் களிப்புடன் பத்மத்தருகில் சென்று மெதுவாய் "அம்மணி! தூக்கம் தெளிந்துவிட்டதா? என்ன யோசிக்கின்றீர்கள்? நான் வைத்தியரால் அனுப்பப்பட்டவன். உங்களுடைய தேகநிலையைக்கவனிக்கும்பொருட்டு ஸர்ஜன்ஸ்வாமிநாத முதலியார் என்னை அனுப்பினுர். நீங்கள் நித்திரை செய்ததனுல் நான் எழுப்ப

வில்லை. தாங்களே எழுந்துவிட்டீர்கள். இதோ இந்த தர்மாமிட்டரை வைத்துக்கொள்ளுங்கள்" என்று கூறியவண்ணம் அதையவளிடம் கொடுத்துவிட்டு அவளது கையைப் பிடித்து நாடியைக் கவனித்தான். அப்போது முக்கால் பாகமும் குணமாகவிருப்பதைக்கண்டு மகிழ்ந்தவனாய்க் குழாய்வைத்துப் பார்த்தான். சிறிது ஜுரமிருப்பதாக தர்மமிட்டரினால் தெரிந்தது. உடனே அதற்குத் தகுந்த மருந்தை உட்செலுத்தினான். பத்மத்திற்கு அப்போது தாகமெடுத்தது. அவள் தண்ணீருக்காகச் சுற்றுமுற்றும் பார்த்தாள். அங்கே சுந்தரனைத் தவிர வேறு யாரும் காணப்படவில்லை. அவள் அன்னிய புருஷனிடத்தில் தனக்குத் தாகவிடாய் தீர்க்க ஜலம்வேண்டும் என்று எவ்வாறு கேட்பதென்ற லஜ்ஜையோடு சும்மா இருந்துவிட்டாள்.

சுந்தரன் இவள் யாரையோ தேடுவதுபோலத் தோற்றியதை நொடியி லறிந்துகொண்டு நயமாகவும் அன்பாகவும் பேசத்தொடங்கி, "அம்மணி! தாங்கள் ஏதோ சுற்றுமுற்றும் பார்த்துப் பின் மௌனமாகவிருந்து விட்டீர்களே, என்ன செய்தி? யாரைத் தேடுகின்றீர்கள்? தங்களுக்கு என்ன தேவை? தேவையானவற்றைத் தெரிவித்தால் வரவழைக்கத் தயாராக உள்ளேன்" என்றான்.

இவனது கனிந்தமொழியைக் கேட்ட பத்மத்திற்கு ஒன்றுமே தோன்றவில்லை. இவனைப் பார்த்த மாத்திரத்தில் அவளுக்கு ஏதோ ஒரு பழைய சங்கதி நினைவிற்கு வருகின்றதேயன்றி அவள் அவனை நேராகப் பார்க்கவும் பேசவும் லஜ்ஜையேகொண்டு பதில் கூறாமலிருந்து விட்டாள். தாம் எவ்விதம் இவரிடத்தில் தாகமென அறிவிப்பது? தாகமோ அதிகமாக உபத்திரவிக்கின்றதே அம்மா, இந்திரா, எல்லோரும் எங்கே சென்றுவிட்டார்கள்? அவர்கள் வருவதை எதிர்பார்த்திருக்கும் வரையில் பிராணன் போய்விடும் போல் இருக்கின்றதே என்ன செய்வேன்? இந்த மனிதரோ வெகு வாஞ்சையாயும் மரியாதையாயும்கண்ணியமாயும் பேசுவது காதிற்கும் மனத்திற்கும் இனிமையாகவே இருக்கின்றது என்றாலும் அவரை எவ்வாறு தீர்த்தம் கேட்பது என்று யோசித்துக்கொண்டே சும்மா இருந்துவிட்டாள்.

அதைக்கண்ட சுந்தரன் மனதில் சற்றுக் கலவரமடைந்து "ஐயோ! நான் எத்தனைதரம் கேட்டாலும் அவள் மௌனமாகவே

யோசிப்பதைப் பார்த்தால் நான் இங்கிருப்பதில் அவளுக்கு சம்மத மில்லை போலிருக்கிறது. அந்தோ! இவளுடைய யாழ்போன்ற குரலி ஞல் பேசுவதைக்கேட்டுப் பேரானந்தமடைய எண்ணியதும் வீணுய்ப் போய்விடும் போலிருக்கின்றதே. ஆஹா! நாம் இவளுடைய மனே பாவத்தை யறிய முடியாமல் இங்கு இவளுக்கு அருவருப்பை உண் டாக்கிக்கொண்டு உட்கார்ந்திருப்பது கேவலம் முட்டாள்தன மன்ருே! நம்மால் பிறருக்கு யாதொரு தொந்தரவுமில்லாம லிருக்கும் வரையில் நாம் உட்கார்ந்திருப்பது தகுமேயன்றிப் பிறருக்கு வருத்த மேற்படும்படியாக நாம் இங்கிருப்பது சற்றும் பொருந்தாது. ஆஹா! நேற்று இரவு நான் தவித்ததற்கு இரங்கி ஈசன் இவளருகிலேயே இருக்கும்படியான பாக்யத்தைக் கொடுத்தும் மனதிற்கு ஒரு சந்தோ ஷத்தை அளிக்கவில்லையே! ஏ! மாதர்க்கரசியே! என் மனத்திலிருப் பதை எவ்வாறு உனக்கறிவிப்பேன்! அந்தோ! ஆற்றுமணலை எண் ணினாலும் எண்ணலாம் நான் உன்மேல் கொண்ட ஆசையை அளவிட் டுச் சொல்ல முடியுமோ? அடடா! கடைசித் தரமாய் இன்னும் ஒரு தரம் கேட்டுவிடுவோம். அதற்கும் இவள் பேசாதிருந்து விட்டால் ஏதோ முகாந்தரத்தை வைத்துக்கொண்டு நாமிவ்விடத்தை விட்டுப் போய்விடுவோம்'' என்று தீர்மானம் செய்துகொண்டு மெல்ல நிதான மாகப் பேசத்தொடங்கி, ''அம்மணி! தாங்கள் எதையோ விரும்புவ தாக நான் நன்ருயறிகின்றேன். நான் என்னவென்று எத்தனை முறை கேட்டாலும் தாங்கள் பேசாமலிருப்பதை நோக்க, நானிங்கிருப்பது தங்களுக்கு முற்றிலும் அருவருப்பாக இருப்பது போல் தோற்று கின்றது. அம்மா! நான் வைத்தியரின் உத்தரவுப்படி இங்கு இருக்க வேண்டியது அவசியமாகையால் இவ்விடத்திலிருக்கிறேன். அதனுல் தங்கள் மனதிற்கு வருத்தம் ஏற்படுவதாகத் தெரிந்தபின்னும் இங்கி ருக்க என் மனம் சம்மதிக்கவில்லை யாதலால் வேண்டியபோது மருந்து கொடுக்க வருகிறேன்; மற்றபொழுது வீதிப்பக்கமாகிலும் போய் உட்கார்ந்திருக்கிறேன். அதனுல் தாங்கள் சற்றும் ஆயாசப் படவேண்டாம். அம்மணி! இதோ இப்பொழுது மருந்து சாப் பிடும் வேளையாதலால் அதனைக் கொடுத்துவிட்டுச் செல்லுகிறேன். அதுவரையில் சற்றுப் பொறுக்கவேண்டும்'' என்றுமெதுவாய் மொழிந் தான்.

இதைக்கேட்ட பத்மவல்லிக்கு இன்னதென்று விவரிக்க இயலாத மனநிலைமை உண்டாய்விட்டது. அவள் மிகவும் இளகிய கோழை நெஞ்சுடையவள்; பிறருக்கு மனம் நோவும்படி சற்றும் எண்ணியவளேயன்று. அவளுடைய கண்ணுல் காதால் பிறர் வருந்தவும் கண்ணீர் விடவும் கண்டுசகியாத அவ்வளவு அருமையான மனமுடையவள். அவளுடைய தேவாம்ருதம் போன்ற குணமும் இலவம்பஞ்சு போன்ற மிருதுவான மனமும் அவளிடம் பழகியறிந்த பின்னரே தான் விளங்கும். அத்தகைய கோழைமனத்துடைய பத்மத்தின் காதில் சுந்தரன் மனமுடைந்து கூறிய வார்த்தை கூரிய ஈட்டி கொண்டு குத்துவது போலாய்விட்டது. "ஐயோ! பிறர் மனம் வருந்தும்படியாக நான் நடந்துவிட்டேனே! அடடா! அன்னிய புருஷரென்ற லஜ்ஜையினுல் நான் வெறுமனேயிருப்பதை அறியாமல் இவர் மனவருத்தப்படுகிருரே! நான் எவ்வாறு மாற்றுவேன் இதை? அந்தோ! நம் பொருட்டாகவே இங்குவந்து பாதுகாக்கும் மனிதருக்கு நம்மால் வருத்தமுண்டாவதென்றால் அதைவிடப்பாபம் வேறு என்ன வேண்டும்? இச்சமயம் இங்குத்தாதிகூட இல்லாமல்எங்கேயோசென்று விட்டாளே! இவர் எழுந்து போவதற்குத் தயாராய் விட்டாரே. மருந்தையும் அதோ கோப்பையில் கொட்டி வைத்துவிட்டார். இனியும் நாம் சும்மா இருப்பது தருமமன்று. வைத்தியரை அன்னியராக நினைப்பது தவறு. அவர்களிடம் பேசாது மரியாதை செய்பவர்களே இலர். ஆதலால் நாம் பேசாமலிருந்து மீண்டும் வருத்தத்தை உண்டாக்கலாகாது" என்று எண்ணியவளாய் மெல்லத்தணிந்த குரலில் பேசத்தொடங்கி "ஐயா! யான் ஜனித்த இந்த 15 வருஷமாக என் பொருட்டாக பிறர்மனம் நோவும்படியாக நான் நடந்ததே இல்லை. இன்று நானென்ன பாபம் செய்தேனோ. என் பொருட்டாகத் தங்கள் மனம் புண்ணுகும்படி நடந்துவிட்டேன். ஐயோ! நான் தாங்கள் இருப்பதனுல் சிறிதும் வெறுப்புக்கொண்டவளேயல்ல. தாங்களிருப்பதனுல் எனக்குயாதொரு ஆயாசமும் கிடையாது. என் தாகவிடாயைத் தணிப்பதற்காகத் தங்களுக்குத் தொந்தரவு கொடுக்கவேண்டுமேயென்று இங்கு யாராவது இருக்கின்றுர்களா என்று சுற்று முற்றும் பார்த்தேன். யாருங் காணுமையால் பேசாமலிருந்துவிட்டேன். இதனுல் தங்களை வெறுத்ததாகத் தாங்கள் எண்ணுவது கூடாது. என் பொருட்டாகத் தாங்கள் இன்று

முற்றிலுமிருந்து பாதுகாக்க வந்திருக்கும் தயாளகுணமுடைய தங்களை நான் வெறுப்பதென்றால் கேவலம் மிருகத்திற்கும் கடையவளாக வல்லவா இருக்கவேண்டும்? ஐயா! தாங்களப்படி சற்றும் நினைக்க வேண்டாம். எனக்கு உபகாரம் செய்யவந்த தங்கள் மனம் கோணும்படியாக நான் ஒரு சிறிதும் கனவிலும் நினைக்கமாட்டேன். அதைப்பற்றித்தாங்கள் வித்தியாசமாய் எண்ணவேண்டாம். எனக்குத் தாகமதிகரிக்கின்றது; கொஞ்சம் தண்ணீர் வேண்டும்: அதற்குத்தான் நான் பார்த்தேன்'' என்று வெகு வணக்கமாயும், மரியாதையாயும், பரிதாபகரமாயும் கூறினாள்.

ஆஹா! இவளது வாயாகிய அமிருதகலசத்திலிருந்து வெளிவரும் வார்த்தையாகிய அமிருதத்தைப் பருகுவதற்காகக் காத்துக்கொண்டிருந்த சுந்தரன் இதைக் கேட்டதும் பரமானந்தமடைந்து கண்ணில் நீர்ததும்பக்கொந்தளிக்கும் இன்பத்தை அடக்கவியலாதவனுய்ச் சற்று தத்தளித்துப் பின் ஒருவாறு தேறி மெல்லப் பேசத்தொடங்கியபடி அங்கு ஒரு பாத்திரத்திலிருந்த தீர்த்தத்தைச் சிறிய டம்ளரில் எடுத்துக்கொண்டு பத்மத்தருகில் வந்து அன்பாய்க் கனிந்த பார்வையோடு நோக்கிய வண்ணம் ''ஆ! அம்மணி! எனக்கு ச்ரமமென்று கருதித் தாங்கள் இந்நேரம் இந்த மெலிந்த நிலைமையில் தாகத்தை யடக்கிக் கொண்டு மௌனமாக இருக்கலாகுமா? தங்களுக்குத் தண்ணீர் எடுத்துக்கொடுப்பதனுலா எனக்கு ச்ரமம் வந்துவிடும்? அடடா! மனிதருக்கு மனிதர் இந்த அற்ப உதவி செய்வது ச்ரமமாய்விட்டால், பிறகு உலகமென்ன உதவி என்ன ஒன்று மில்லையே! மனிதஜன்ம மெடுத்ததற்குப் பலன் பிறருக்கு உபகாரம் செய்யாமல் உட்கார்ந்திருப்பதுதானு? கேவலமான மிருகம், மரம், செடி, கொடி கூட அதற்குத் தகுந்த உதவி செய்வதாகவே தோன்றுகின்றது. அங்ஙனமிருக்க நான் என்ன செய்ய சாத்தியமில்லாத வேலையைச் செய்து ச்ரமப்படப்போகிறேனு? இதோ இருக்கும் தண்ணீர் எடுத்துக்கொடுக்க எனக்கு ச்ரமமென்று எண்ணுவது கூடாது. எங்கள் தொழிலின் முறைக்கு எப்பேர்ப்பட்ட காரியத்தையும் செய்வது ச்ரமமே இல்லை. எல்லாம் சகஜம்தான். இதையொரு பெரிய ச்ரமமாகத் தாங்கள் எண்ணக் கூடாது. மனிதருக்கு மனிதர் செய்யச் சாத்தியமுள்ளதைத் தானே நான் செய்யப்போகிறேன். இது ஒரு கஷ்டமா? அப்படி ஒருநாளும் எனக்குக் கஷ்டமே இல்லை. இதோ தண்ணீர்'' என்று மரியாதையாக நீட்டினுன்.

இவனுடைய கண்ணியமான வார்த்தையைக் கேட்ட பத்மம் தனக்குள் அவன் கூறியதை யெல்லாம் கேட்டு ஆநந்தத்துடன் அவன் கௌரவத்திற்கும், மரியாதைக்கும் உள்ளாழ்ந்தமகிழ்வோடு வியந்தவாறு மெல்லத் தீர்த்தத்தை வாங்கிக்கொள்ளக் கையை எடுத்தாள். முதல் நாளிரவில் இஞ்செக்ஷன் செய்திருந்த பாதையால் மெல்

வியு அவள் கரத்தில் வீக்கமேற்பட்டு அது வலி அதிகரித்து விட்டபடியால் கையை அசைத்து எடுக்க முடியாமல் சற்றுத் தவித்தாள். இதைக்கண்ட சுந்தரன் "அம்மணி! உங்கள் கரத்தில் நேற்று ஊசி குத்தியதால் வலி அதிகமாக விருப்பது வீக்கத்திலிருந்தும் தாங்கள் கையை எடுக்கக் கஷ்டப்படுவதிலிருந்தும் தெரிகின்றது. அம்மா! தாங்கள் அவ்வாறு சிரமப்படாமல் மருந்திற்கு வாய் திறப்பதுபோல் சற்று வாய் திறந்தால் நானே மெல்ல வார்க்கிறேன்" என்றான்.

இதைக்கேட்ட பத்மவல்லிக்கு அப்போது கைவலியும் தாகமும் சேர்ந்து பாதித்ததால் அவள் என்ன சொல்வதென்று சற்றுயோசித்துக்கொண்டிருக்கையில் இந்திரா அவ்விடத்திற்கு வந்து பத்மத்தைநெருங்கி "கண்மணி பத்மம்! உனக்கென்ன வேண்டுமம்மா? அம்மாள் என்ன செய்கிறார்கள் என்று பார்ப்பதற்காகச் சற்று உன்னை விட்டுச் சென்றேன். சென்றவிடத்தில் சில நிமிஷங்களாய்விட்டன. உன் தாயைப்பலவந்தப்படுத்தி உண்ணச் செய்வித்துவந்தேன். அவர்கள் நேற்றுமுதல் சுத்தப்பட்டினியல்லவா" என்றுகூறிக்கொண்டுவருகையில் அவளுக்குச்செல்லப்பாவின்செய்திநினைவிற்குவந்துவிட்டது. 'பத்மம் அதி நுட்பமான புத்தியை யுடையவளாயிற்றே. அவள் அம்மாள் இன்று காலை ஏன் சாப்பிடவில்லை என்று கேட்டால் நாம் என்ன செய்வது? அவளுடைய தேக நிலைமைக்காக அவளிடம் இச்செய்தியைத் தெரிவிக்க வேண்டாமென்று அவளுடைய பெற்றோர் எல்லோரிடமும் சொல்லி யிருந்து தாமும் இவ்விடத்திலிருந்தால் முக மாறுபாட்டினால் பத்மம் அறிந்துகொள்ளப் போகிறாளே என்ற முன் ஜாக்கிரதையினால் இவ்விடத்தைவிட்டு விலகி யிருக்கின்றார்களே. அப்படி யிருக்க நாம் அந்தத்தகவலை இங்குப் பிசகாகத் தெரிவித்துவிட்டால் பிறகு தர்ம சங்கடமாய் விடும். அந்தச் சந்தேகத்திற்கு இடங்கொடாமல் பேசவேண்டும்' என்று எண்ணியவண்ணம் பேசவாரம்பிப்பதற்குள், பத்மம் பேசத் தொடங்கி "இந்திரா! அம்மாள் நேற்றுமுதல் ஏன் பட்டினி கிடக்கவேண்டும்? காலை போஜனம் செய்து பிறகு அன்னம்புசித்து டிப்பன் செய்யும் நேரமும் ஆய்விட்டதே! ஏன் இன்னேரம் போஜனம் செய்யவில்லை? எனக்கு இவ்விதம் வந்துவிட்டதே என்ற கவலையினாலா? எனக்குத்தான் நன்றாகக் குணமாய்விட்டதே! இன்னம் எதற்குக் கவலைப்பட வேண்டும்?" என்று கேட்டாள்.

இந்தி:—பத்மம்! அம்மாள் காலைப்போஜனம் என்னோடுகூடச் செய்தார்கள். நேற்றிரவெல்லாம் கண் விழித்திருந்ததினால் தாங்க இயலாத நித்திரை வந்துவிட்டது. அதனால் அப்பொழுது படுத்தவர்கள் இது பரியந்தம் நித்திரை செய்தார்கள். வெகு நேரமாய்விட்டதே என்று நானே எழுப்பினேன். பிறகு எழுந்து சாப்பிட்

டார்கள். ஏன் பத்மம்! உனக்கு இப்பொழுது முற்றும் குணமாய்விட்டதா? கண்ணெரிச்சல் நின்றுவிட்டதா?—என்று பேச்சை மாற்றிக் கூறினாள்.

பத்மம்:—கண்ணெரிச்சல் இன்னம் சிறிது இருக்கின்றது. ஊசியால் குத்தி மருந்தேற்றிய இடமெல்லாம் ரணமாக வலிக்கின்றது; வேறொன்றுமில்லை. எனக்குத் தாகமதிகமாக வருத்துகின்றது. கொஞ்சம் தீர்த்தம் கொடு. அதற்குத்தான் நான் இங்கெல்லாம் பார்த்தேன். உன்னைக் காணவில்லை; தாதியையுங்காணவில்லை. நான் பேசாதிருந்து விட்டேன்.

இந்தி:—பத்மா! நான் இப்பொழுதுதானே சென்றேன். இன்னும் ஐந்துநிமிஷங்கூடவாகவில்லையே! தாதி களைத்துப்போய் அதோ பக்கத்தறையில் படுத்திருக்கின்றாள். வைத்தியரும் தாதியுமிருக்கின்றார்களே என்று நான் காரியமாக உட்சென்றேன்; வரும்போது தாதி படுத்திருப்பதைக் கண்டேன், உடனே உனக்கு என்ன தேவையோ என்று வந்தேன். இதோ தீர்த்தம். வாயைத்திற;நானே வார்க்கிறேன்—என்று அன்பாய்க் கூறினாள். உடனே பத்மம் தனது தாகத்தைச் சாந்தி செய்துகொண்டாள். அப்பொழுது லக்ஷ்மியம்மாள் தன் விசனத்தையெல்லாம் மனதிலடக்கிக்கொண்டு பத்மத்தினருகே வந்து "என் கண்மணி! உனக்கு எப்படி இருக்கின்றதம்மா உடம்பு! நன்றாகக் குணமாய்விட்டதா?" என்றாள். பத்மவல்லி தன் தாய் வெகு பரிதாபகரமாகக் கேட்டதைக் கண்டதும் மனதிளகியவளாய் மெல்லப் பேசத்தொடங்கி "அம்மா! எனக்கு முற்றிலும் குணமாய்விட்டது. நீங்கள் கவலைப்பட வேண்டாம். இன்னம் சற்றுநேரம் நிம்மதியாகத் தூங்கிவிட்டு வாருங்கள். இந்திரா! தாதி எழுந்துவிடுவாள். நீயும் வேண்டுமானால் சற்று நித்திரை செய்துவா. பாபம். நமக்காக இந்தப் புண்ணியவான் பார்த்துக்கொண்டிருக்கையில் நமக்குப் பயமொன்றுமில்லை. நீங்கள் நித்திரைசெய்புங்கள்" என்று கூறிக்கொண்டே இருக்கையில் அவ்விடத்திற்கு முதலியார் வந்தார். அப்போது பத்மம் விழித்திருந்ததைக்கண்டு சற்றுச் சந்தோஷித்தவராய் தன்மனத்தை வேறு பேச்சு பராக்கில் மாற்றவேண்டும் என்ற எண்ணத்துடன் பத்மத்தினருகில் உட்கார்ந்து, 'என் கண்ணே! பத்மா! உனக்கு இப்பொழுது ஒன்றுமில்லாமல் குணமாய்விட்டதா? நேற்றிரவு நீ இருந்த நிலைமையைக்கண்ட நாங்கள் நீ மீண்டும் இவ்விதம் பேசி நாங்கள் பார்ப்போமா! என்று ஏங்கினோம். எங்கள்பங்கில் ஈச்வரன் கடாக்ஷித்து,(சுந்தரனைக்காட்டி) இந்தமஹானை அனுப்பிக்காக்கும்படிச்செய்தார்.பத்மம்! இவர்யார் உனக்குத்தெரியுமா! நேற்று உன்னைக்கடலினின்றும் எடுத்துக்கரை சேர்த்த கடவுள் இவர்தான். இவரே வைத்தியராகவும் பாதுகாக்கும்படி வந்திருக்கின்றார். இது கடவுளின் திருவிளையாடல்

போலும்' என்றார். இதைக்கேட்ட பத்மவல்லி, வியப்பையடைந்து "ஆ! இந்தப் பரமபுருஷரா நம்மைக்காப்பாற்றினார்! அடடா! இவருடைய காருண்யகுணமும் இன்னுமற்றுள்ள குணத்தின் ஒலி மணிபோன்று முகத்தில் பிரகாசிக்கின்றதே. தனது உயிரையும் மதிக்காமல் கடலில் குதித்துக் காப்பாற்றியது வியப்பிலும் வியப்பாக வல்லவாவிருக்கின்றது. இக்காலத்தில் பிரதி பலனைக்கருதாமல் ஒருவருக்கொருவர் உபகாரம்செய்வதென்பதே குதிரைக்கொம்பாகப்போய்விட்டதே. இத்தகையகாலத்தில் இப்பேர்ப்பட்ட புண்ணிய புருஷர்களும்இருக்கின்றார்களா! ஆஹா! இத்தகைய மனிதர்களின் பொருட்டாகத்தான் மாரி பெய்து மகிழ்விக்கின்றதோ! அடடா! இத்தனைநேரம் நமக்கு இந்த வரலாறு தெரியாமலிருந்ததே..................ஆம். இப்பொழுது எனக்கு நினைவுக்கு வருகின்றது. இவரை நாம்பலதரம் கண்டிருக்கிறதாக............ஓஹோ! நாம் நேற்றுக் கப்பலில்கூட இவரைப்பார்த்ததாக நினைவிற்கு வருகின்றதே?...............ஆம், ஆம். முதல்வகுப்பின் பிரயாணிகள் ஏறும்இடத்தில் இவர் யாருடனோ மந்தகாசமாய் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார். அது நன்றாக நினைவிற்கு வருகின்றது"......என்று இவள் யோசித்துக் கொண்டிருக்கையில் முதலியார் மீண்டும் பேசத்தொடங்கி "என்னபத்மம்! நீ ஏதோ யோசிக்கிறாய் போலும்! என்ன யோசிக்கின்றாயம்மா!" என்று அன்புகனியக் கேட்டார். இதைக் கேட்ட பத்மவல்லி தன் யோசனையை மாற்றிப் பதிலளிக்கவேண்டுமென்று எண்ணியவளாய்த் தன் தந்தையை நோக்கி, மெல்லநிதானமாகவும் வெகுநயமாகவும் மரியாதையாகவும் பேசத்தொடங்கி ஒன்றுமில்லையப்பா! உங்களுக்குத்தெரியாதது யாதிருக்கின்றது? ஒன்றுமில்லை; அப்படியிருந்தும் நீங்கள் தவறுதலாக நடந்துவிட்டீர்களே என்றுதான் யோசிக்கின்றேன். தம்முடைய உயிரைத் த்ருணமாக மதித்து, கடலில் குதித்து என்னைக்காப்பாற்றிய இந்த மஹானுபவன் நமக்கு வைத்தியராகவும் வந்திருக்கும்போது, அவரை நீங்கள் கவனிக்காமல் இவ்விதம் அவமரியாதையாகத் தனியாக விட்டுவிட்டுச் செல்வது அழகாகுமா? நம்முடைய உயிரைக் காப்பாற்றிய மனிதரை நம்முடைய சொந்த மனிதராக மதித்து நடக்காமல் தாங்கள் எங்கோ சென்றுவிட்டீர்களே என்றுதான் யோசித்தேன்" என்றாள். இதைக்கேட்ட முதலியார் தனது மகள் வெகுநியாயமாகவும் நன்றிப் பெருக்கைக்காட்டியும் பேசியதைக்கண்டு மகிழ்ந்தவராய் "கண்ணே, பத்மம்! நான் அவரைக் கவனிக்காமல் அவமதிப்பாக விட்டுச்செல்லவில்லை. நமக்கு அவர் உயிர்பிச்சை கொடுத்த மஹான் என்று மாத்திரம் நான் எண்ணவில்லை; நீ சொல்லியதுபோலவே அவரை நான் நமது சொந்தப்பிள்ளையாகவே எண்ணிவிட்டேன். அதன்பிறகு அவருக்கு நாம் மரியாதை செய்வது அழகல்ல. அவருக்கில்லாத அக்கரை வேறு யாருக்கு? அவரே எல்லாவற்றையும்பார்த்துக் கொள்ளும்படி சுவாதீன

மாயும் மனப்பூர்வமான ப்ரேமையோடும் விட்டுச்சென்று, சற்றுப் படுத்தேன்.'' என்றார். இதைக் கேட்ட பத்மம் வேறு பதிற் சொல்லாமல் சுந்தரனை யொருமுறைக் கடைக்கண்ணால் பார்த்துவிட்டுத் திரும்பி அப்புறம் படுத்துக்கொண்டாள்.

அப்போது ஒரு சேவகன் வந்து முதலியாருக்கு வணங்கி "எஜமான்! யாரோ தங்களைக் காண்பதற்கு வந்திருக்கிறார்கள்" என்றான். உடனே முதலியார் எழுந்து சென்றார். லக்ஷ்மியம்மாள் முன்னரே போய்விட்டாள். இந்திராணி அவ்வறையில் ஒரு பாகத்தில் நின்றிருந்தாள். சுந்தரன் பத்மம் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டதும் அவளுடைய அம்ருதம் போன்ற குணத்தையும் இனிமையாகப் பாடும் குயில் போலவும் தனக்கு மரியாதை செய்யும்படியாகப் பரிந்துப் பேசியதைக் கேட்கக் கேட்க அவன் மனத்தில் அப்போதுண்டான மகிழ்ச்சி வரம்பு கடந்ததாயிருந்தது; என்றாலும் அவன் நன்றாகத்தெரிந்த விவேகியாதலாலும் படித்த புத்திமானாகையாலும்இவற்றையெல்லாம் வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் மனதிற்குள்ளே அடக்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தான். அவன் மனதில் பத்மத்திற்குச் சற்றுமுன் சிறிது ஜுரமிருந்ததே இப்போது எப்படி இருக்கின்றதோ பார்க்கவேண்டும் என்று எண்ணியவனாய்ப் பத்மத்தருகில் வந்து மிகவும் வணக்கமாகவும் மரியாதையாகவும் அன்புகனியப் பேசத்தொடங்கி "அம்மணீ! இதோ இந்த தர்மாமிட்டரை வாங்கி வைத்துக் கொள்ளுங்கள்." என்றான். இதைக்கேட்ட பத்மம் மெல்ல இப்புறம் திரும்பி அதை வாங்கி வாயில் வைத்துக்கொண்டாள். சுந்தரன் பத்மத்தின் கை நாடியைப் பார்த்தான். நாடி ஜுரவேகத்தால் ஓடிக்கொண்டிருப்பதைக் கண்டு அவன் தேகம் ஆட ஆரம்பித்துவிட்டது. "ஐயோ! அப்பொழுதைவிட இப்போது ஜுரம் அதிகப்பட்டிருப்பதாகத் தெரிகின்றதே! இதென்ன காரணமோ தெரியவில்லையே!" என்று எண்ணியவனாய்த் தர்மாமிட்டரை வாங்கிப் பார்த்தான். அதில் 102 டிகிரி இருப்பதாகக் காட்டவே சுந்தரன் இதையவளிடம் சொல்லலாகாதென எண்ணி வேறு மருந்தை ஜுரத்திற்காகக் கொடுத்தான்.

வெளியில் சென்ற முதலியார் வீதியில் காரில் வந்திருக்கும் மனிதர் யார் என்று பார்க்கச் செல்கையில் தான் எதிர்பார்த்திருந்த மனிதரான நமது துப்பறியும் நிபுணரான ராஜாராம் நாயுடு சிரித்த முகத்தோடு இறங்கி எதிரே வருவதைக்கண்டு நாயுடுகாருவை கை லாகு கொடுத்து "வாருங்கள்; வாருங்கள். உங்கள் வரவைத்தான் எதிர்பார்த்திருந்தேன். நான் அப்போதே டெலிபோன் மூலமாய்த் தெரிவித்தும் இன்னும் வரவில்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன்" என்றார். இதைக்கேட்ட நாயுடுகாரு "நானும் எவ்வளவோ அவசரமாகத்தான் புறப்பட்டேன். அப்போது யாரோ ஒருவர்

வந்து விட்டார். அவரை அனுப்பிவிட்டு இதோ வந்தேன். என்ன விசேஷம் முதலியாரவாள்? என் முகம் ஒருவாறாய் வாட்டமடைந் திருக்கின்றது?" என்றார்.

முதலியார் நாயுடுகாருவை அன்பாயழைத்துக்கொண்டு தனது ஹாலில் உட்காரவைத்து நடந்த வரலாறுகளைச் சவிஸ்தாரமாகக் கூறிக் கண்ணீர்விட்டார். இதைக்கேட்ட நாயுடுகாரு ஆச்சரியப்பட்டு "ஆ! இன்று காலைப் பத்திரிகை இன்னும் பார்க்கவில்லை. அடடா! என்ன அநியாயம்! தங்கள் புத்திரன் அவ்விதம் செய் திருப்பானென்று என் மனத்தில் தோன்றவில்லை.

முதலியார்:—நாயுடுகாரு அந்தப் பாதகன் செய்திருந்தா லென்ன செய்யாதிருந்தாலென்ன? ஊர் முற்றுமறிய அவன் திருடி விட்டானென்றும் ஜெயிலில் போயிருக்கிறான் என்ற வசைமொழி பரவிவிட்டது; அதுஒன்று போதாதா! என் குலத்திற்கு இதைவிட அவமானம் வேறு எதுவாகிலும் வேண்டுமா? அவன் எவ்வளவு தத் தாறியாகத் திரிந்துகொண்டிருந்தாலும் இந்த மாதிரியான அவமான மில்லாமலிருந்தது. இப்போதுண்டாகிய இந்த அவமானத்தைத் தான் என்னால் தாங்க இயலவே இல்லை. அதோடு நேற்று என் புதல்வி பத்மவல்லிக்கு நேர்ந்த ஆபத்தை நினைத்தால் தேகம் நடுங்குகின்றது—என்றுமுதல் நாளிலிருந்து இப்போதைய வரையில் உள்ள பத்மத்தின் நிலைமையைக் கூறினார். இதைக் கேட்ட நாயுடு மிகவும் வருத்தமடைந்து, பத்மம் படுத்திருந்த இடத்திற்குச் சென்று அவளைப் பார்த்துவிட்டு, அவ்விடத்தில் முதலியார் தெரி வித்த செய்தி யொன்றையும் வெளியிடாமல் பத்மத்தை நோக்கி, "அம்மா குழந்தாய்! நான் யார் என்பது உனக்கு நினைவிருக்கின் றதா?" என்றார். உடனே பத்மம் அவரைக் கூர்ந்து கவனித்து, வெகு வணக்கத்துடனும் சிரித்த முகத்துடனும் பேசத்தொடங்கி, "நன்றாக நினைவிருக்கின்றது. எங்களுடைய கிட்டிய உறவினரான செஞ்சிக்கோட்டை ஜெமீந்தாரரான ராமாம்ருத முதலியாருக்கு உதவி புரிந்து வைதேகியம்மாளை விவாகம் செய்து வைத்த காலத்தில் நாங் கள் அங்கு வந்திருந்தபோது தங்களை நன்றாயறிவேன். தங்களுடைய பெருமையையும் வீரதீர பராக்கிரமத்தையும் பிறகு வைதேகியம்மாளின் மூலமாய் முற்றும் அறிந்தேன்" என்றாள். இதைக் கேட்ட நாயுடுகாரு மகிழ்ச்சியோடு, "பலே பத்மா! நன்றாய் நினைவிருக்கின்றதே உனக்கு. மறந்திருப்பாயென்றல்லவா எண்ணினேன். சரி; நான் சென்றுவரு கிறேன். உன் உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்" என்று கூறியவாறு திரும்புகையில் சுந்தரனைப் பார்த்தார். அவன் யார் என்பதை யெல்லாம் முதலியாரால் அறிந்துகொண்டு வெளியே வந்து விட்டார். முதலியாரும் நாயுடுவும் முன்போல் ஹாலில் உட்கார்ந் தார்கள்.

முதலியார்:—நாயுடுகாரு! தாங்கள் இந்த விஷயத்தில் என் பொருட்டாக சிரமமெடுத்துக்கொண்டு அந்தப்பாதகன் உண்மையான குற்றவாளியாயல்லவா என்பதை நிரூபிக்கவேண்டும். நாம் வக்கில் வைத்து வாதாடி அவன் குற்றவாளியல்லவென்று ஒருகால் தீர்ப்பாய்விட்டாலுங் கூடத் தாங்கள் உண்மையைக் கண்டுபிடித்துக் கூறவேண்டும். அவன் நிரபராதியாக விருந்து குற்றத்தை யடைந்தாலும், குற்றவாளியாக விருந்து வக்கீலின் சாமார்த்தியத்தால் அவன் குற்றவாளியல்லவென்று வழக்கு முடிந்துவிட்டாலும், நமக்குள் உண்மை தெரியவேண்டியது அத்யாவசியமாகையினல் தாங்கள் உண்மையைக் கண்டுபிடிக்கவேண்டும்'' என்றார். நாயுடுகாருவும் தம்மால் இயன்றமட்டும் முயற்சிப்பதாகக் கூறி விடைபெற்றுச் சென்றுவிட்டார்.

பிறகு பத்மத்தினருகில் முதலியார் வந்து சேர்ந்தார். சுந்தரன் பத்மத்திற்குக் கொஞ்சம் ஜுரம் வந்திருப்பதாகத் தெரிவித்ததைக் கேட்ட முதலியார் திடுக்கிட்டார். "ஐயோ! நன்றாய்க் குணமடைந்து விட்டதென்று எண்ணினேம். இதற்குள் மீண்டும் ஜுரம் வந்துவிட்டதே. என்ன செய்வேன்'' என்று இடிந்து உட்கார்ந்துவிட்டார். சுந்தரன் தகுந்த மருந்துகளைக் கொடுத்துக்கொண்டே வந்தான். பகல் கழிந்து இரவு காலம் வந்தது. பத்மத்திற்கு ஜுரம் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. ஜுரமதிகரித்திருப்பதைத் தெரிந்த லக்ஷிமியம்மாள், இந்திரா எல்லோரும் குன்றிப்போய் பத்மத்தின் பக்கத்திலேயே உட்கார்ந்துவிட்டார்கள். பத்மத்திற்கு ஜுரத்தின் வேகத்தால் மயக்கம் ஏறபடவாரம்பித்தது. அவள் "அம்மா! அப்பா! ஐயோ! என்று அலறவாரம்பித்தாள். இதைக் கண்ட அவளுடைய தாய் இன்னது செய்வதென்று அறியாமல் இடிந்துவிட்டாள். பத்மவல்லி தன் தாயை நோக்கி, ஹீனக்குரலில், "அம்மா! எனக்கு திடீரென்று என்னவோ செய்கின்றது. மயக்கம் வரும்போல விருக்கின்றது தலை சுழலுகின்றதே! ஐயோ! அம்மா! எனக்கு தற்சமயமிருக்கும் நிலைமையைப் பார்த்தால் நான் இறந்துவிடுவேன் போலவிருக்கின்றதே! அம்மா! அம்மா! எனக்கொரு காரியம் செய்வீர்களா? என் மனம் பதைக்கின்றதே'' என்று வெகு பரிதாபகரமாய்க்கேட்டதை அவள் தாய் கேட்டு, கண்ணீர் வடிய, "ஐயோ! என் கண்ணே! உனக்கென்ன காரியமாகவேண்டும்? அதைத் தெரிவித்தால் உடனே செய்கின்றேன்'' என்றாள். இதைக்கேட்ட பத்மவல்லி ஹீனமாகப் பேசத்தொடங்கி "ஐயோ! அம்மா! என்னுயிர் போய்விடும் போல உபத்திரவம் செய்கின்றது. மயக்கம் என்னைக் கலக்குகின்றது. அந்தோ! என்னுயிர் போகும் முன் என்னருமை ராஜலக்ஷ்மியம்மாளை என் கண்ணுல் கண்டு களிக்கும்படிக்குச் செய்வீர்களா! நான்

என்னுயிரை எல்லாம் அவ்வம்மையின்மீதுவைத்துவிட்டதால் என் மனம் தபிக்கின்றதே. அந்தோ! என்னம்மணி, ராஜலக்ஷ்மி! தங்களின் தரிசனம் காணுமலே என்னுயிர் பிரிந்துவிடும் காலமும் வந்துவிட்டதே! தங்களின் பிரிவாற்ருமையைத் தாங்காமலே என்னுடல் நாளுக்குநாள் மெலிந்துகொண்டே வந்தது. கடைசியில் திடீரென்று உயிர்போய்விடும் சமயமும் வந்துவிட்டதே. ஹா! என்ன செய்வேன். பாவியேன் தங்களின் புகைப்படமாகிலும் ஒன்று என் கைவசம் வைத்துக்கொள்ளாமல் போய்விட்டேனே! ஹா அம்மா! அவர்களை இப்பொழுது இங்கு வரவழைத்து என் உயிர் போவதற்குள் கண்ணாரக்காணும்படிச்செய்யுங்களேன்.ஐயோ! என் மூளை கலங்குகின்றதே. ஹா அம்மா! அம்மா!'' என்று வாய் விட்டு அலறிக்கொண்டே மயக்கத்திலாழ்ந்துவிட்டாள். அந்தோ! அவள் கூறிய பரிதாபகரமான வார்த்தைகளைக் கேட்டு அங்குள்ளோர் கண்ணீர்விட்ட வண்ணம் துடிதுடித்து மனந்தாங்காமல் கதறவாரம்பித்துவிட்டார்கள். பத்மம் பேசியதையும் மயக்கத்தில் ஆழ்ந்ததையும் பார்த்த சுந்தரனுக்கு இன்னதென்று விவரிக்கயியலாதக்கம் வந்துமூண்டு அவனை வாதித்தது. அதையடக்கி மேலுக்குக்காட்டிக்கொள்ளாமல் முதலியாருக்குத் தேறுதல் கூறி ஸர்ஜன் சாமிநாதனை அழைத்துவரும்படி ஆளை யனுப்பினுன். அப்போது இரவு சுமார் 10-மணி சமயமிருக்கலாம். பத்மத்தருகில் அவள் பெற்ருேர் கதறிக்கொண்டிருக்கிருர்கள். சுந்தரன் தனக்குத் தெரிந்த சிகிச்சைகளை எல்லாம் செய்துகொண்டே இருக்கிருன். அப்போது அந்த ஹாலுக்குப் பக்கத்திலிருந்து சில பணிமக்கள் ''ஐயோ! ஐயோ! நெருப்பு!நெருப்பு பிடித்துக்கொண்டு எரிகின்றதே! ஐயோ!துணிமணிகளெல்லாம்எரிகின்றதே!புகைசூழ்ந்துவிட்டதே!'' என்று பெரிய கூக்குரல் செய்வதைக் கேட்ட எல்லோரும் அலறியடித்துத்திடுக்கிட்டு''ஐயோ!இது என்ன போதாதவேளை! வீட்டில் நெருப்புப்பிடித்துக்கொண்டதே!''என்றுஎல்லாரும்எழுந்து அறைக்கு வெளியில் வந்து பார்க்கப் புகை சூழ்ந்துகொண்டு எரிகின்றவிடம் பத்மம் படுத்திருக்கும் ஹாலுக்குப் பக்கத்து அறை யாதலால் புகை நிரம்பிவிட்டது. ஐயோ! வீடு பற்றிக்கொண்டதே! ஹா! என்ன செய்வோம்! ஐயோ! எந்த விதமாக வீட்டில் நெருப்புப் பிடித்துக்கொண்டது. ஹா! ஈச்வரா! இந்தச் சங்கடமும் எங்களுக்குப் பாக்கியிருந்ததோ! ஐயோ! அதிகமாகப் பற்றி எரிகின்றதே படீர் படீர் என்று வெடிக்கின்றதே! என்ன செய்வோம்?'' என்று எல்லோரும் பதைபதைத்து அங்குமிங்கும் ஓடித்துடிக்கலானுர்கள்.

உ

ஓம்

ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு

திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து

மலர் IV	அக்ஷய௵ மார்கழிமீ December 1926.	இதழ் 3

திருமால் துதி.

பருங்கோட்டு மதயானை படியின்மிசை முடிந்தொழிய
ஒருங்கோட்டு நல்வினையா னுயர்மாம னுயிரொழித்தும்
அருந்தகைசேர் வளையாழி யணிமலரங் கரமறப்பத்
திருந்தலரைப் பெருஞ்சமரிற் றிறலழிக்கும் விறலோய்நின்
கதிருலவு நெடுமுடியும் கமழ்துளவம் பெறுபுயமும்
மதிமுகமும் நதியுறைபு மலரடியு மனனகத்து
நிலவவருள் புரிகுவையேல் நெடும்பாச வினையொழிந்து
குலவுநலம் கொள்வன் குறித்து. ஸ்ரீவீரராகவகவி

சோதியே சுடரே சுகமே துணை
நீதியே நிசமே நிறைவே நிலை
யாதியே யுனையா னடைந் தேனகம்
வாதியா தருள் வாயருள் வானையே.

தாயுமானவர்.

ஸ்ரீ தந்வந்தரி அவதாரம்.

வாசவ நீயும் வானவர் தம்முடன்
ஆசறச் சென்றிட் டணிவரை மந்தரம்
கொண்டுபோற் கடலைக் குளிர்திரை பொங்க
அண்ட ருடனே யணிபெறக் கடைவாய்
அன்றவண் வருது மென்றவன் உரைக்க
வானவர் கோனும் மகிழ்ந்து அவனுணையால்
கானுறு வரைகொடு கார்க்கடல் தன்னைக்
கடைகையி லவ்வரை கடற் கீழுழுந்தித்
தடையுறத் தேவர் தாமோ தரனைச்
சிந்தையில் நினைந்து செழுமறை யொலியால்
பந்தனை தீரப் பரவுங் காலை
முழுமுதற் கடவுள் முனைந்தவண் தோன்றிப்
பழுதற வாமையாய்ப் பண்புட னம்மலை
முதுகினிற் றங்கி மொய்கடல் தன்னை
இதமுறக் கடைகையில் எழுந்தன ளிந்திரை
தெய்வச் சுரபியும் தேவ மகளிரும்
உய்வுறு மெழிலுடை யுச்சைச் சிரவமும்
பாரிஜாதமும் பண்புறு கௌஸ்துபம்
மாரி போலமுதம் மகிழ்வுறப் பொழியும்
கலைபெறு திங்களுங் கடுமையார் விடமும்
நிலைபெற வெழுந்தன நீடிய வானவர்
கடுவினைக் கண்டு கலங்குங் காலை
வடுவிலாது அவர்க்கு வந்தெதிர் தோன்றி
அஞ்சன்மின் யாரும் அபயந் தந்தனம்
எஞ்சிடா தருள்வோம் என்றொரு காத்தில்
அமுதமார் கலசம் அணிபெற வேந்தி
இமையவர் மகிழ்ந்தே யேக்கமற் றொளிர
விஞ்சிய நஞ்சினை விரிசடைச் சங்கரன்
அஞ்சிடா துண்ண வருளி வேறசுரரை
உலகெலா மயக்கு மொண்டொடி யணங்காய்
இலகமுன் றோன்றி யிமைப்பினில் வஞ்சித்து
இமையவர் யார்க்கு மெழில் அமுதருளிக்
குமைவுறு தவரைக் குறிப்புடன் காக்க
வந்தருள் தன்வந் தரியை நோக்கி (தொடரும்)

ஹாஸ்யத் துணுக்குகள்.

(1) கிழவர்:—ஏண்டா பையா அழுகின்றாய்?

பையன்:—உம். உம். கடைக்காரன் ஏழைபாய்விடுகிறானே என்று அழுகிறேன்.

கிழவர்:—கடைக்காரன் ஏழையானுலென்ன அதற்கு? ஏன் நீ அழுகிருய்? அழுதால் அவன் பணக்காரனுய்விடுவானே?

பையன்:—(சிரித்துக்கொண்டே) ஓ! கட்டாயம் பணக்காரனுகி விடுவான்.

கிழவர்:— அது எப்படியப்பா?

பையன்:—நான் வெறுமே அழுது தொந்தரை செய்தால்தானே எனக்கு நீங்கள் காசு கொடுப்பீர்கள். நானதை எடுத்துக்கொண்டு போய் உடனே சாக்லேட், பப்பர்மின்டு எல்லாம் வாங்கித் தின்பேன். கடைக்காரன் எனக்கு பப்பர்மின்டு கொடுத்து பணக்காரனுகிவிடு வான். நான் பப்பர்மின்டு வாங்கி பாபர்சீட்டுகூட வாங்கிவிடுவேன்.

கிழவர்:—பேஷ். வெகு அழகாக இருக்கிறது.

(2) கிழவி:—ஏண்டி வெறுமே வாய் மூடாமல் சிரிக்கின்ருயே என்ன அதிசயத்தைக்கண்டாய்?

பெண்:—எதிர்வீட்டில் தினம் தினம் கலியாணம் வந்துவிடுகின் றதே அதற்காகச் சிரிக்கிறேன்.

கிழவி:—கலியாணமானுல் சிரிப்பெதற்கு ?

பெண்:—அவர்கள் வீட்டில் தினம் தினம் கலியாணம் வருவ தும் போதும் என்னைப்பாடச் சொல்லி ப்ராணனைஎடுப்பதும் போதும். அதற்காகத்தான் சிரித்துச் சிரித்து தொண்டையைக் கட்டச் செய்து கொண்டால் பாடாமலிருக்கலாம் என்று காலேமுதல் சிரிக்கிறேன். பாதி கட்டிவிட்டது.

கிழவி:—பேஷ் வெகு அழகு. நீ சிரிப்பதோடு இருப்பவர்களை யும் சிரிக்கச் செய்கிருயே.

(3) புருஷன்:—என்ன எழவுடீ இது? வெளியில் சென்று வேலே செய்து அலுத்து வீடுவந்தால் நீ என்னவோ முகத்தைக் கடுவன் பூனைபோல வைத்துக்கொண்டிருக்கிருயே என்ன கோபமடி உனக்கு?

பெண்ஜாதி:—நான் பெண்பிறந்த சவரணைக்குக் கோபமென்ன? நேற்றுக்காலேப் பெண் பக்கத்துவீட்டுப் பாலாமணி இன்னும் விடிய விடிய 13 வயதாகவில்லே, அதற்கு நாளைக்கு சீமந்தமாம். எனக்கும் 35 வயதாகிறது,ஒருநாளைக்காவது எனக்குச்சீமந்தம் செய்ததுண்டா? வளைகாப்பு செய்ததுண்டா அதுதான் கோபம்.

புருஷன்:—(சிரித்துக்கொண்டே) அட கஷ்டகாலமே! மலடி யான உனக்குச் சீமந்தம் எப்படிச் செய்வது? பேஷ் நன்ருக இருக் கின்றது உன் புத்தி விசாலம்.

(4) தகப்பன்:—பையா! உனக்குத்தீபாவளிக்கு 15 ரூபாய் தருகி றேன். அதனை நீ என்ன செய்வாய்?

பையன்:—(சந்தோஷத்துடன்) அப்பா! நான் கரியில்பாதி; தறியில் பாதி போட்டுவிடுவேன்.

தகப்பன்:—என்னடா நீ சொல்வது அர்த்தமாகவில்லை.

பையன்:—ஏனப்பா? பாதிப்பணம் பட்டாஸ் முதலியவை வாங்கிக் கரியாக்கிவிடுகிறேன். பாதிப்பணம் துணி வாங்கித் தறிகாரனுக்குக் கொடுத்துவிடுகிறேன், சரிதானே.

தகப்பன்:—வெகு சந்தோஷம் அப்படியே செய்.

(5) வாத்தியார்:—என்னடா பையா! கணக்குப் போட்டுவிட்டாயா?

பையன்:—போட்டாய்விட்டது. எனக்குத் தெரியாதவற்றை எங்கம்மாளைக் கேட்டுத் தெரிந்துகொண்டேன். நீங்கள் கொடுத்த காகிதத்திலிருந்த கணக்கை முதலில் கிழித்துக்கழித்தேன்; அப்புறம் கழித்ததை விளக்கு மாற்றால் பெருக்கினேன்; அதன்பிறகு அவற்றையெல்லாம் வகுத்துக் கூட்டினேன். பிறகு வீதியில் கொண்டு கொட்டிவிட்டேன். தாங்கள் சொல்லியபடி கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல், ஆகிய நான்கும் போட்டுவிட்டேன்.

உபாத்தியாயர்:—அப்பா! நீ நல்ல கெட்டிக்காரத்தனமாய்க் கணக்குப் போட்டதற்காக உன்னைக் கீழ் வகுப்புக்கு ப்ரமோஷன் செய்துவிட்டேன். ஓடு நாயே!

வை. மு. கோ.

1927ஆு கியாலண்டர் வரவு

இரங்கூனில் பிரபல்மாகப் புத்தக வியாபாரம் செய்து வரும் நவீன கதா புக்டிபோக்காரர்களின் சென்னைப் பிரதிநிதியான M. A. மலீக் சாயபு அவர்கள் அன்பு கூர்ந்தனுப்பிய 1927-ம் வருஷத்திய கியாலண்டர்கள் மூன்றும் வழக்கம்போல் இங்கிலீஷ், தமிழ், இஸ்லாம், தெலுங்கு தேதிகளும் பண்டிகைகளும் அடங்கியனவாயிருப்பதுடன், சிறியருமே யன்றிப் பெரியரும் கொண்டாடத்தக்க விதமாயும் வீட்டில் எப்போதும் வைத்துக்கொள்ள விரும்பும்விதமாயும் ஒரு கியாலண்டரில் ஒவ்வொருமாதத்தாளில் சிரோபூஷணமாய் விளங்கும் நீதிவாக்கியங்கள் மிகவும் பாராட்டத்தக்கவைகளா யிருக்கின்றன. இப்படிப்பட்ட கியாலண்டர்கள் பல வெளிவருவதும் உலக உபகாரமாகும். வியாபாரமுறையை மாத்திரம் அநுசரித்துச் செய்யாமல்பிறர் நீதிமார்க்கத்தி லீடுபடும்படி கியாலண்டர் அமைத்துள்ளது பிரசுரித்தவரின் பரம உபகாரகுணத்தை உணர்த்துவதாகிறது.

இனாம்! இனாம்!

முற்றிலும் இனாம்!

'C' ரிஜிஸ்டர்! 'C' ரிஜிஸ்டர்!

டைம்பீஸ் டைம்பீஸ்



இனாம். இனாம்.

எங்களின் "தாரா" லீவர் 18-காரட்டு ரோல்டுகோல்டு பாக்கட் கடியாரம் பின்புறம் சித்திரவேலை செய்யப்பட்டதை வாங்குகிறவர்களுக்கு 'C" டைம்பீஸ் இனாமாக அனுப்பப்படும். விலை பாக்கட் கடியாரம் 1-க்கு இனாமுடன் ரூ. 5. இக் கடியாரத்தில் உள்ள டையலின் பேரில் ஐந்து வருஷம் உத்திரவாதம் என்று அச்சிட்டிருக்கிறது. முந்துங்கள்.

காப்டன் வாச் கம்பெனி, தபாற்பெட்டி நெ 265, மதராஸ்

பாதி விலை! ஒரு மாதம் வரையிலும் பாதி விலை!

அசல் விலை ரூபாய் 14.

பாதி விலை 7.



22 காரட்ரோல்ட்டு கோல்டுகைக் கெடியாரம் 10 வருஷம் உத்திரவாதம். பார்வைக்கு அழகாயும், இக் கெடியாரங்களில் எம்மாதிரி ஷேப் ஆனபோதிலும் அனுப்பிவைக்கப்படும். பாதி விலை ரூ 7. ஒவ்வொரு கெடியாரமும் ஒரு பட்டு பட்டையுடன் அனுப்பி வைக்கப்படும்

ஸ்வான் ஹவுஸ்,

தபால் நே. **508**, பி. டி. மதராஸ்

Fever

Thermometer of first class German make tested at a German Laboratory just imported.

Rs. 1 2 0 each. Dozen Rs. 12 0 0

Tool Box consists of 12 tools useful for every household. Strong & Durable.

Rs. 1 4 0 each

Dozen Rs. 13 8 0

Electric Pocket Lamp. Useful in every home; gives a clear and bright light.

Rs. 1 8 0 each. Dozen Rs. 15 0 0

Postage and packing extra for all.

SAMSON & Co.,

73, T. P. Koil St., Triplicane.

வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார் எழுதிய

விலாஸவதி.

ஒரு இனிய தமிழ் நாவல்

இரண்டு பாகங்கள்	3 0 0
கனகசபை (ஒரு துப்பறியும் நாவல்)	1 8 0
கோகிலம்	0 12 0

ஷண்முகம் கம்பெனி,

திருவல்லிக்கேணி, மதராஸ்.

படை மருந்து.

இந்த மருந்து நாள்பட்ட படைகளை கஷ்டமில்லாமல் நிவர்த்தி செய்கிறது.

ஒரு டின் விலை. 0—6—0

பாக்கிங், தபால் சார்ஜ் பிரத்தியேகம்

பேரல் கம்பெனி,

136. பெரியதெருவு, திருவல்லிக்கேணி.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பகவத் விஷயம்.

நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழிக்குத் திருக்குருகைப்பிரான் பிள்ளான் அருளிச்செய்த ஆறுயிரப்படி வ்யாக்யாநமும், வேதாந்தியான நஞ்சீயர் செய்தருளிய ஒன்பதினாயிரப்படி வ்யாக்யாநமும், பெரியவாச்சான் பிள்ளையின் திருக்குமாரராகிய நயினாராச்சானது சிஷ்யரான வாதிகேஸரி அழகிய மணவாளச்சீயர் செய்தருளிய பன்னீராயிரப்படி வ்யாக்யாநமும், (மற்றை மூவாயிரங்களுக்கும் வ்யாக்யாநஞ்செய்தருளிய) பெரியவாச்சான் பிள்ளை திருவாய்மலர்ந்தருளின இருபத்துநாலாயிரப்படி வ்யாக்யாநமும், நஞ்சீயர் சிஷ்யரான நம்பிள்ளையினிடத்து வடக்குத்திருவீதிப் பிள்ளை கேட்டபடியே பட்டோலைகொண்டு அங்ஙனமே வெளியிட்டருளிய ஈடுமுப்பத்தாறுயிரப்படி வ்யாக்யாநமும் ஆக ஐந்து வ்யாக்யாநங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றுள், ஈடுமுப்பத்தாறுயிரப்படிக்கு அடையவளைந்தான் அரும்பதவுரையென்றும் சீயர் அரும்பதவுரை யென்றும், இரண்டு அரும்பதவுரைகள் உண்டு.

இவ்வாறு பெருமைபெற்ற இந்தப் பகவத் விஷயத்தை அச்சிடும்படி ஆரம்பித்து நடந்துவருகின்றது. இப்போது முதல் ஐந்து பத்துக்கள் அச்சுமுடிந்து வெளியா யிருக்கின்றன. ஆறும்பத்து அச்சு நடக்கின்றது.

சந்தாதாரர்களாவதற்கு விரும்புகிறவர்கள் நாளை டிசம்பர் மாதம் முடிவதற்குள் தங்கள் பெயர்களை ரிஜிஸ்டர் செய்துகொண்டு உடனே அவர்கள் கீழ்க்கண்டபடி சந்தாத்தொகையை அனுப்பவேணும்.

அவர்கள் அனுப்பவேண்டிய முன்பணம் ரூபாய் - 45. இந்தத் தொகையை ஒரேதடவையில் அனுப்ப முடியாவிட்டால், முதலில் 35 ரூபாயும், பிறகு மாதம் ஒன்றுக்கு ஐந்து ரூபாய்வீதமும் அனுப்ப வேணும். அவ்வாறு ரூபாய் 35 அனுப்புபவருடைய பெயரை ரிஜிஸ்டர் செய்துகொண்டு, சேர்ந்த தொகைக்கு ரசீதும், முதல் ஐந்து பத்துக்களும் (ரயில்பார்சல்மூலம்) அவர் அட்ரஸுக்கு அனுப்பப்படும்.

இப்போதே ரிஜிஸ்டர் செய்து கொள்ளாமல் ஆறும்பத்து முடிந்த பிறகு புஸ்தகம் வேண்டுபவர்களுக்குப் புஸ்தகத்தின் விலை ரூ. **60** ஆகும்.

ஒவ்வொரு பத்தும் தனித்தனி புஸ்தகமாகப் பயிண்டு செய்து சந்தாதாரர்களுக்கு அனுப்பப்படும்.

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய புத்தகசாலை,

19, தென்னண்டை மாடவீதி.

திருவல்லிக்கேணி.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

குறைந்த சந்தாவில் நடைபெறும் உயர்ந்த மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை

எது?

முன்னிலும் பெரிய அளவில்
திருச்சியினின்று வெளியாகி வரும்

"நச்சினார்க்கினியன்" தான்.

நாவல், நாடகம், வியாசம், விநோதக்கூற்று, சிறுவர்க்காகும் கதைகள் விடுகதை, விடுவிப்பு வினாக்கள், வெளிவராத நூல்கள், ஒன்றையொன்றிகழாச் சமயக்கொள்கைகள், இந்துதேச சரித்திரக்கதைகள், சைவ வைணவ புராண இதிகாசக்கதைச் சுருக்கம், தமிழ் நூலாராய்ச்சி, சமாசாரக்கொத்து, பரீக்ஷை வினாக்கள், பிறமொழி, நூல்மொழிபெயர்ப்பு, இனிய செய்யுட்கள் முதலியன இதில் வெளிவரும்.

வருட சந்தா ரூ 2 தான். வெளிநாடுகளுக்கு ரூ. 2 8 0

விளம்பர விகிதம்:—பக்கத்திற்கு ரூ. 5 அரைப்பக்கத்திற்கு ரூ. 3 நீடித்த விளம்பரங்களுக்கு சகாய விகிதம்.

இப்பத்திரிகையின் சந்தாதாரர்க்குரிய நலங்களைப் பத்திரிகையிற் காண்க. மாதிரிப்பிரதி வேண்டுவோர் 3 அணா ஸ்டாம்பு அனுப்புக.

பண்டித : ம. கோபால கிருஷ்ணையர்,
பத்திராதிபர், "நச்சினார்க்கினிய நிலயம்"
"தெப்பக்குளம் போஸ்ட்."

காமதேனு.

ஓர் உயர்தர மாதாந்திர தமிழ்ப்பத்திரிகை.

பிரதி பௌர்ணமியிலும் வெளிவரும்.

இதில் கிராமமுன்னேற்றத்திற்குறிய முக்கிய விஷயங்கள் ஐக்கிய இயக்கம், கிராமபஞ்சாயத்துகள், விவசாயம், வியாபாரம், பிரதமக்கல்வி முதலிய எல்லாவிஷயத்தையும் கிராமவாசிகளுக்கு சொற்பசந்தாவில் தெரிந்துகொள்ளும்பொருட்டு இதை நடத்திவருவதால் எல்லாகிராமவாசிகளும் ஐக்கியஸ்தர்களும் இதை ஆதரிக்கவேண்டுகிறோம். சந்தா வருஷம் 1-க்கு ரூபாய் 1—8—0 முன்பணமாகக் கட்டவேண்டும். விளம்பர விகிதங்களுக்கு பத்திராதிபருக்கு எழுதித்தெரிந்துகொள்ளவும்.

R. ஆனந்தறாவ், "காமதேனு" பத்திராதிபர்,
திருத்தங்கல், சிவகாசி மார்க்கம்

ஆனந்த போதினி.

தமிழ் நாட்டில் பழமையும் புதுமையும் வாய்ந்ததும், 20000-சந்தாதாரர்களுடையதுமான மாதப் பத்திரிகை இது ஒன்றே. இதற்கு 12-வது வருடம் இப்பொழுது நடக்கிறது. இதுவரையில் சந்தாதாரராய்ச் சேராதவர்கள் இப்பொழுதே சேருங்கள். பிரதிமாதமும் 48 - பக்கங்களுள்ள விஷயங்களுடன் இது வெளிவரும்.

வருடச்சந்தா இந்தியா பர்மா, சிலோன் முதலியவற்றிற்குத் தபாற் செலவு உள்பட ரூ. 1. வெளி நாடுகளுக்கு ரூ 1-4-0 மாதிரிக்காபி இனாம்.

ஆனந்த போதினி ஆபீஸ், மதராஸ்.

"கிருஷிகன்"

ஓர் மாதாந்த விவசாயப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்கள்:—

(1) ராவ்பஹதூர் ஜெ. செல்வரங்க ராஜு

பென்ஷண்ட் விவசாய டேப்டி டைரெக்டர்

(2) J. R. ரங்கராஜு

வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூபாய் ஒன்று தான்.

சௌமிய௵ சித்திரைமீ முதல் எட்டு வருஷ காலமாய் தேதி தவறுமல் பிரதி தமிழ்மீ முதல் தேதிகளில் "கிருஷிகன்" வெளிவந்துலாவியதும், அப்போது நடந்த "பெரும் ஐரோப்பிய சண்டையில்" யுத்தம் புரிந்து வந்த ராணுவ வீரருக்குக் காய் கரிகள் பயிரிட்டு கொடுப்பதற்காக சர்க்காராரின் வேண்டுகோளுக் கிணங்கி கிருஷிகன் பத்திரிகாசிரியரான ஸ்ரீமான் J. R. ரங்கராஜா அவர்கள் மெஸபிடோமியாவுக்குப் போவதெனத் தீர்மானித்து சந்தாதாரருக்கு முன் கூட்டி அவ்விஷயத்தைத் தெரிவித்ததோடு சந்தாதாரருக்குப் பாக்கியுள்ளியில் பத்திரிகை அனுப்பி விட்டு பின் நிறுத்திய விஷயம் சந்தா நேயர்கள் அனைவரும் அறிந்ததே. அப்பால் பத்திரிகாசிரியருக்கு ஏற்பட்ட பல சங்கடங்களாலும், காகிதக் கிரைய உயர்வாலும் பத்திரிகை மறுபடியும் துவக்க வில்லை.

சென்னை விவசாய டிபார்ட்மென்ட்டில் மிகக் கியாதியாய் 30 வருஷங்களுக்கு மேல் வேலை செய்து வந்ததற்காக கவர்ண்மெண்டாரால் ராவ்பஹதூர் பட்டம் அளிக்கப் பட்டவரும், தமிழ் ஜில்லாக்களிலுள்ள "கிருஷிகன்" நண்பர் என எல்லோராலும் மதிக்கப் படுபவருமான ஸ்ரீமான் ராவ்பஹதூர் ஜெ. செல்வரங்க ராஜா அவர்களும் பத்திரிகாசிரியராய் இருப்பதாய் ஒத்துக்கொண்டதால் இவ்விரு பத்திரிகாசிரியர்களின் ஆதீனத்தின் கீழ் முன்னிலும் மேன்மைப் பட்டு விளங்குமென்பதில் சந்தேகமில்லை.

எல்லோரும் சுலபமாய் அறிந்து கொள்ளக் கூடிய எளிய நடையில் கிருஷிகருக்கு அனுகூலமுண்டாகக் கூடிய வழிகளை எடுத்துக் காட்டுவதிலும் கிருஷிகருக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்திப்பதிலும் "கிருஷிகனு" க்குச் சமானமான பத்திரிகை கிடையவேகிடையாதென்பது நிச்சயம்.

"கிருஷிகன்" பத்திரிகையானது சுயநலத்தைச் கருதாது விவசாய அபிவிருத்தியையும், அதன் மூலமாய் தேச க்ஷேமத்தையும் கருதி வெளிப்படுவதால் வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூ. ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

"கிருஷிகன்" அக்ஷய௵ சித்திரைமீ முதல்தேதி முதல் வெளிவந்திருக்கிறது. வி.பி. மூலமாய் அனுப்பினுல் ரிஜிஸ்ட்ரேஷன்கூலி சேர்த்து ரூ 1-4-0 ஆகும். ஆகையால் உடனே ரூ. ஒன்று மணியார்டர் செய்து தங்கள் பேர்களைப் பதிவு செய்து பத்திரிகை பெற்று கொள்ளுங்கள்.

மானேஜர் "கிருஷிகன்" ஆபீஸ்

"ஜெகந்நாதபாக்" சைதாப்பேட்டை, சென்னை.

'ஒற்றுமை'

சித்திரப் படங்களுடனும் விநோதப் படங்களுடனும் வெளி வரும் ஒரு தமிழ் மாதப் பத்திரிகை. பல பண்டிதர்களால் எழுதப் படும் அரிய விஷயங்களைத் தன்னகத்துக் கொண்டது. தமிழ் மொழியின் வளர்ச்சி கருதி வெளி வருவது. வருஷ சந்தா உள்நாடு ரூ. 1 0 0 வெளிநாடு ரூ. 1 4 0 தனிப்பிரதி உள்நாடு ரூ. 0 1 6. வெளி நாடு ரூ, 0 2 0 பிரதிகள் மதராஸ் நியூஸ் ஏஜன்ஸியிலும், ஹிகின்பாதம்ஸ் ரெயில்வே ஸ்டேஷன் புத்தக ஸ்டால்களிலும் கிடைக்கும். சந்தா முன் பணமாக அனுப்பினால் 4 அணு லாபமாகும். ரூ. 1. ஸ்டாம்பாகவும் அனுப்பலாம். 6.வது தொகுதி 1925-ம் ஹு நவம்பர் மாதம் முதல் ஆரம்பம். மாதிரிப் பிரதி இனும்.

ஒற்றுமை ஆபீஸ்,
சைதாபேட்டை, சென்னை.

ஹிதாயதுல் இஸ்லாம்
10,000 பிரதிகள் வெளியாகின்றன.

இப்பத்திரிகை மார்க்க விஷயங்களையும், வியாபார விஷயங்களையும், இராஜாங்க சட்டங்களையும் ஒற்றுமையும் ஜாதி ஒற்றுமையும் மத ஒற்றுமையும் விவரித்து ஜாதிமத வித்தியாசமில்லாமல் எடுத்துப் பேசுகிறபடியால் ஒவ்வொருவருக்கும் அவசியம் தேவையானது. இது ஒவ்வொரு தனவந்தர்களுடைய வீட்டிலும் போய் உலாவுகிறபடியால் வியாபாரிகளுக்கு அவசியமானது.

வருஷச் சந்தா ரூ. 6 0 0
மலாய் நாடுகள் ரூ. 8 0 0

விலாசம்:—மானேஜர்,
ஹிதாயதுல் இஸ்லாம்,
571, 3.ம் மரதானு, கொழும்பு, (சிலோன்.)

JC
…/N22S…
N26·4·3

கம்மபாலன்

பிரதி தமிழ் மாதக் கடைசியில் வெளிவரும் ஓர் பாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை. பொது விஷயங்களும் கம்மகுல முன்னேற்ற விஷயங்களும் வெளிவரும். கிராமவாசிகளுக்கின்றி யமையாதது. வருடசந்தா தபாற் செலவுட்பட ரூபாய் ஒன்றுதான். மிகக் குறைந்த சந்தா. விளம்பரங்களுக்கு ஏற்றது. நீண்டகால விளம்பரங்களுக்குக் குறைந்த விகிதமுண்டு. முன் பணமனுப்புதல் வேண்டும். மற்றும் விவரங்களுக்கு எழுதுங்கள்.

R. வெங்கடசாமி நாயுடு,
பத்திராதிபர் "கம்மபாலன்"
திருத்தங்கல். சத்தூர் S. I. R.

தமிழ்நாடு … நூலகம்
182832
சென்னை

ஆநந்த குணபோதினி.

ஒரு நூதன உயர்தர மாதப் பத்திரிகை.

பிரசித்த அநுபவஞான சாஸ்திரி இதன் ஆசிரியராய் விளங்குகிறார்.

இத்தகை நவீன சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை. இது தமிழ் அறிந்த ஒவ்வொருவர் அகத்துள்ளும் புகுந்து நிலவும் உன்னதம் வாய்ந்தது. சித்திரப் படங்களுடன் திகழ்வது. கல்விச் செல்வம், பொருட்செல்வம் பெருகி இன்பம் ஒங்குவதற் குரிய வியாசங்களால் ஒளிர்வது. அறிவை விளக்கி உற்சாகத்தைக் கொடுப்பது. நன்னடக்கையும். லௌகிக யுக்தியும், பாஷை ஞானமும், தேசாபிமானமும் ஈசுவர பக்தியும், ஆழ்ந்த யோசனையும் உண்டாக்கக் கூடியது எல்லா மதஸ்தர்களுக்கும், எல்லா ஜாதியார்களுக்கும் எற்றதாய் நல்ல விஷயங்கள் இருக்கப் பெற்றது. சொல் நயம் மிகுந்து தமிழ் உலகமெல்லாம் ஜொலிக்கும் படியாயிருப்பது "ஆனந்தகுணபோதினி" தான் ஆடவர், மகளிர், பெரியோர் சிறியோர் எவர்கையிலும் இப் பத்திரிகையை இனிக் காணலாம்.

இதில் "ஆனந்த தரிசனம்" "பழமொழிக் குறிப்புகள்" "பத்திரிகா சாரம்" "பெண்கள் பக்கம்" பிரபஞ்ச தரிசனம்" "விகடப் பிரதாபன்" "சென்ற மாதம்" என்ற தலைப் பெயர்களின் கீழ்வரும் ஒவ்வொரு விஷயங்களும் சிந்தைக்கினிய வாய்க்கினிய அலங்கார வசன மழையாய் விளங்கும். இப்பத்திரிகையே எவ்விஷயத்திலும் வெகு சிறந்ததென்பதைத் தங்களுடைய அனுபவத்தில் தாங்களே அறிந்து கொள்ளலாம. ஆநந்த குணபோதனியின் சொற்பசந்தாவை உற்று நோக்குங்கள். வருஷசந்தா ரூபாய் ஒன்றே (ரூ. 1.) இன்றே எழுதுங்கள். உடனே சேருங்கள்.

தி. இராஜகோபால் முதலியார், 302, தங்சாலை தெரு,
மின்ட் பில்டிங் போஸ்டு, மதராஸ்.

தமிழ் தெரிந்தவர்கள் வெகுசுலபமாக இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக்கூடியது

27000-ஜனங்கள் வாசித்து பிரபலமடைந்தது.

எமது லேடி டிரேட்மார்க்குப் போட்ட புத்தகம்
பார்த்து வாங்குங்கள்.

மோசம் போகாதீர்கள். கவனியுங்கள்.

இப் புத்தகத்தில் சொல்லியபடி இல்லாவிட்டால்
பணம் திருப்பிக்கொடுக்கப்படும்.

ஆங்கில-ஆசான்

60-நாளில் இங்கிலீஷ் யாவரும் கற்றுக்கொள்ளலாம்.

இது இங்கிலீஷ் பேசவும், படிக்கவும் எழுதவும்
கற்றுக்கொள்ளக்கூடியது சுலபமான
தமிழில் சுமார் 800 பக்கம்கொண்டது.

இவ்வெட்டாம் பதிப்பில் வெகு சிரமப்பட்டு $1\frac{1}{2}$ ரூபாயிலிருந்து 3000 ரூபாய்வரை மாதச் சம்பளக் கணக்கும், வீட்டு வாடகைக் கணக்கும் போடப் பட்டிருக்கிறது. இந்தக் கணக்கை மாத்திரம் வெளியில் 2 ரூபாய்க்கு விற்கிறார்கள். புஸ்தகத்திற்கு முந்துங்கள்.

பெரிய புத்தகம் 8-ம் பதிப்பு — விலை ரூ. 2-0-0
தபாற் செலவு — அணா 0-8-0

தி. ராஜகோபால் முதலியார், 302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

இனிய தமிழ் நாவல்கள்

வடுவூர். கே. துரைசாமி ஐயங்கார் எழுதியவை.

	ரூ.	அ.		ரூ.	அ.		ரூ.	அ.
பூர்ண சந்திரோதயம் 1,2,3,4	7	8	கும்பகோணம் வக்கீல் 1, 2	3	0	வஸந்த மல்லிகா	1	
மாயாவிநோதப் பரதேசி 1,2	5	0	மேனகா 1, 2,	3	0	வித்யாஸாகரர்	1	8
மதனகல்யாணி 1,2,3	4	8	விலாஸவதி 1, 2	3	0	திவான் லொடபட சிங் பகதூர்	0	12
			பாலாமணி	2	8	மாணிக்கவாசகர்	0	8
			சௌந்தரகோகிலம் 1, 2,	3	12			

ஆரணி - குப்புசாமி முதலியார் இயற்றியவை.

	ரூ.	அ.		ரூ.	அ.		ரூ.	அ.
ஞானசெல்வாம்பாள் 5-பாகம்	9	10	தேவசுந்தரி	1	4	நாகபூஷணம்	0	12
மதனாம்பாள் 2-பாகம்	3	0	மஞ்சளறையின் மர்மம்	1	8	அந்தப்புரக்காதல்	1	4
லோகநாயகி	1	0	மின்சாரமாயவன்	1	8	இந்திராணி	1	4
விளையாட்டுச் சாமான்	1	6	கமலசேகரன்	1	12	இரங்கநாயகி	1	4
பூங்கோதை	0	10	இந்திராபாய்	2	8	சுந்தர்ஸிங்	1	8
குணசுந்தரன்	0	12	பவளத்தீவு	3	0	கற்பகசுந்தரி	2	12
வீரநாதன்	0	12	கனகபூஷணம்	3	8	வல்லபநாச்சியார்	1	4
சுவர்ணாம்பாள்	0	12	அமராவதி	4	0	இந்திரஜித்தன்	1	4
தபால்கொள்ளைக்காரர்கள்	0	14	இரத்னபுரிரகசியம்	4	0	கமலநாதன்	1	8
பத்மாஸனி	0	14	ஆனந்தசிங்	2	0	மதனகாந்தி	1	8
தினகரசுந்தரி	1	0	கற்கோட்டை	2	0	அயாஷா	1	12
மதனபூஷணம்	1	0	லீலா	1	0	அம்புஜாக்ஷி	2	0
			புஷ்பவனம்	0	14	லண்டன் திருடர்கள்	2	12
			குலசேகரன்	1	0	மாண்டிகிருஸ்டோ	3	0
						உமர்பாஷா	4	12

தி. ம. பொன்னுசாமிப்பிள்ளை எழுதியவை.

	ரூ.	அ.		ரூ.	அ.		ரூ.	அ.
கமலாக்ஷி	1	12	ஞானாம்பிகை	1	8	சிவஞானம்	1	4
ஞானப்பிரகாசம்	1	8	ஞானசம்பந்தம்	1	4	விஜயசுந்தரம்	2	0

ஜெ. ஆர். ரங்கராஜு எழுதியவை.

	ரூ.	அ.		ரூ.	அ.		ரூ.	அ.
விஜயராகவன்	1	0	சந்திரகாந்தா	0	12	வரதராஜன் 2-பாகம்	2	0
இராஜேந்திரன்	1	0	மோஹன சுந்தரம்	0	12	(ஜெயரங்கன் அச்சில்)		
இராஜாம்பாள்	0	12	ஆனந்தகிருஷ்ணன்	0	12			

வத்ஸா அண்டு கம்பெனி,

திருவல்லிக்கேணி சென்னை.

ஓர் நிருபம்

திரு. T. D. சுந்தரராஜூ என்பவருக்கு வயது சுமார் 22 இருக்கும். இவர் நாயுடு வகுப்பைச் சார்ந்தவர். இவர் இதுவரை வியாபார முறையில் ஈடுபட்டிருந்து ஓர் மாத காலமாய் அத்துறையை விட்டு ஓர் பெரியாரின் உபதேசத்தால் தனிமையாய் ஓர் ஜாகா ஏற்படுத்தி அதில் விநாயகர் விக்கிரகம் வைத்து தினம் மூன்றுகால "சத்தி பூஜை" நடத்தி வருகிறார். இவரது குணாதிசயங்கள் பெரிதும் ஆச்சரியத்தை விளைவிக்கக்கூடியதாயிருக்கின்றன. ஓர் மாத காலமாய் இப்புண்ணிய சீலர் எத்தகைய நோய் வாய்ப் படுபவர்கட்கும், பேய் பிசாசு பிடித்துள்ளார்கட்கும், பில்லி, சூன்யம் என்னும் ஏவலால் தூண்டப்பட்டுள்ளார்கட்கும், குழந்தைகள் பிணிகட்கும் தனது விபூதி பிரசாதம்,எலுமிச்சங்கனியின் மகிமையினாலே சொஸ்தப்படுத்தி வருவதால் ஏராளமான ஜனங்கள் வருகின்றனர். 27—11—26 முதல் இப்புண்ணிய சீலர் "சத்தி பூஜை" 48நாளைக்குஉண்ணாவிரதம் கொள்ளப் போகிறார். விரைவில் பெரிய மகானுபாவர் மகிமை ஏற்படுமென நம்புகிறேன். இவரது அபார சக்தியை விரிவாய் வரைய நம்பத்திரிகை இடம் தராதெனச் சுருக்கி எழுதியிருக்கிறேனென மணப்பாறை "திராவிட சங்க" காரியதரிசி திரு. கே. என். நாராயணசாமி பிள்ளை அவர்கள் எழுதுகிறார்.

Tamilian Residents of Bombay !

We have pleasure in informing that we have appointed

MR. V. KRISHNASWAMY,

22. Veljee Lukamjee Building

Matunga. Bombay.

as our Agent with power to collect subscriptions and grant receipts. This arrangement will save unnecessary postal expense to our intending subscribers. Copies of the Journal can be had from him.

JAGANMOHINI OFFICE,

26, Car Street, Triplicane,

Madras.

OUR OTHER AGENTS.

Sri Vani Vilasa Book Depot. Tirupapuliyur,

A. ATHMARAMAN,

C/O HEADMASTER,

Board Boys' School. Aruppukottai.

அமிர்தாஞ்சனம்

அமிர்தாஞ்சனம்

சர்வ நோய்களுக்கும்

ஸித்த ஔஷதம்

விலை அணா 10 ரூ. 0-10-0

1927 காலண்டர்கள் 1927

பிரபல சித்திர வேலைக்காரரால், மூன்று வர்ணங்களில்
மோஹினிப்படம் வரைந்துள்ளது.

படம் ஒன்றுக்கு ரூ. 0—2—0.

டஜன் ரூ.. 1—4—0. 100 ரூ. 9— 12—0.

சிறிய அளவு லக்ஷ்மி காலண்டர்

டஜன் ரூ. 0—8—0. 100 ரூ 3—8—0.

(தபால் பாக்கிங் சார்ஜ் வேறு).

உடனே முந்துங்கள்.

மோஹினி தைலம்.

பாட்டில் 1-க்கு 0—12—0

படைமருந்து — டப்பி 1-க்கு 0—6—0

பல்பொடி — டப்பி 1-க்கு 0—2—0

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

அமிர்தாஞ்சன் டிப்போ,
7. தம்புச்செட்டி வீதி, சென்னை.

Edited and Published by V. M. Parthasarathy Iyengar.
PRINTED AT THE 'N LE PRESS,' TRIPLICANE, MADRAS, S. E